Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :197 வைகாசி 31ஆம் நாள் சனிக்கிழமை 13 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## ரயிலுடன் மோதி ஒருவர் சாவு

கிளிநொச்சி, ஜூன் 13

கிளிநொச்சியில் ரயிலுடன் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று இரவு 10.30 மணியளவில் நடந்துள்ளது.

இரணைமடுச் சந் 15

# தேர்தல் வியூகம் அமைக்கும் கூட்டமைப்பு வேட்பாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட பொதுத்தேர்தல் வேட்பாளர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி எதிர்வரும் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடினர். 15



## பஸ்கள் மீது கல்வீச்சு

கிளிநொச்சி, ஜூன் 13

கிளிநொச்சிப் பகுதியில் பஸ்கள் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சார்வெளிப் பகுதியில் மாலை 6 மணியளவில் நடந்துள்ளது.

இரு பஸ்கள் மற்றும் தண்ணீர் பவுசர் ஆகியவற்றின் மீது இனந் 15

## குடத்தனை குளத்தில் இளைஞனின் சடலம்!

யாழ்ப்பாணம், ஜூன் 13

பொற்பதி - குடத்தனைப் பகுதியில் 27 வயதுடைய இளைஞர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். செல்வகாந் விஜயகாந் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டவராவார். அந்தப் பகுதியில் உள்ள குளமொன்றில் சடலமொன்று இருப்பதை அவதானித்த ஊரவர்கள் பருத்தித்துறை பொலி 15

## கிளாலியில் வீடு புகுந்து மூவர் மீது கடும் தாக்கு!

சாவகச்சேரி, ஜூன் 13

வீட்டுக்குள் புகுந்த கும்பல் ஒன்று வீட்டிலிருந்த தம்பதி உட்பட மூவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியதுடன், வீட்டில் உள்ள உடைமைகளையும் தாக்கி சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. 15

### வடக்கு கல்வி அமைச்சில்

## தேர்தல் காலத்தில் பதவி உயர்வுகள்!

### உடன் நிறுத்தப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

தேர்தல் காலத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் வழங்கப்பட்ட பதவி உயர்வுகளை இடைநிறுத்துமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ. இளங்கோவன் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி கல்வி வலயம் மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலயம் உள்ளிட்ட வலயக் கல்வி அலுவலகங்களில் பதிலீட்டா 15

## தபால் மூல வாக்களிப்புக்கான திகதி இன்னும் முடிவில்லை!

### தேர்தல்கள் ஆணைக்குழு கூறுகிறது

கொழும்பு, ஜூன் 13

பொதுத்தேர்தலின் தபால்மூல வாக்களிப்புக்கான தினங்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளபோதும், தேர்தல்கள் ஆணைக்குழு இன்னமும் உத்தியோகபூர்வமாக அந்தத் திகதிகளை அறிவிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் 15

## ஆட்டம் தொடங்க முன்னரே சஜித்தின் விக்கெட்டுகள் சரிவு

கொழும்பு, ஜூன் 13

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றுமொரு வேட்பாளரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகியுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் களமிறங்கிய முன்னாள் மத்திய மாகாண ஆளுநர் நிலுகா ஏக்கநாயக்கவே இவ்வாறு திடீரென பின்வாங்கியுள் 15

## தேர்தல் நடந்த மறுநாளே வாக்கெண்ணும் பணிகள்

கொழும்பு, ஜூன் 13

ஓகஸ்ட் 6ஆம் திகதி காலையே இம்முறை வாக்கெண்ணும் பணி ஆரம்பமாகும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வழமையாக காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்களிப்பு இடம்பெற்ற பின்னர், வாக்குப் 15

## வல்லை முகாமில் வெடிப்பு சம்பவம்?

யாழ்ப்பாணம், ஜூன் 13

வல்லை இராணுவ முகாமில் வெடிப்புச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது என்ற தகவல் வெளியானபோதும் இராணுவத்தினர் அதை மறுத்துள்ளனர்.

நேற்றிரவு சுமார் 10 மணியவில் இராணுவ முகாமில் வெடிப்புச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது என்றும், அதில் இரா 12

## இந்திய வியாபாரிக்கு எவ்வாறு கொரோனா?

*இன்னமும் கண்டறியப்படவில்லை என்கிறார் பணிப்பாளர் நாயகம்*

கொழும்பு, ஜூன் 13

இணுவிலில் தங்கியிருந்து நாடு திரும்பிய இந்திய வியாபாரிக்கு எப்போது, எப்படி கொரோனாத் தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பாக, இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில், புடைவை வர்த்தகத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரிக்கு எவ்வாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன, அவர் இலங்கையில் இருந்தபோது தொற்றுக்குள்ளானாரா அல்லது இங்கிருந்து சென்ற பின்னர் தொற்றுக்குள்ளானாரா, என்பது தொடர்பில் இதுவரை எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை. எனினும், இலங்கையில் அதைக் கண்டறிவதற்கான நடவ 15

## நாவாந்துறையில் நாளை பரீட்சார்த்த வாக்களிப்பு

### மறுநாள் முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு ஒத்திகை நடத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய 15

## இந்தியக் கலாசார மண்டப மின் கட்டணத்தால் சர்ச்சை

*கட்டடத் திறப்புக்கு முன்னரே யார் செலுத்துவது என பிடுங்குப்பாடு*

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் இந்திய அரசின் நிதி உதவியில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்துக்கான மின்சாரக் கட்டணம் 10 லட்சம் ரூபாவைத் தாண்டும் நிலையில் அதனைச் 15

## வலி.வடக்கு இடப்பெயர்வு 30ஆவது ஆண்டு நிறைவு

*இன்னமும் மீள்குடியமர்வு முழுமையடையவில்லை*

யாழ்ப்பாணம், ஜூன் 13

வளம் கொழிக்கும் வலி.வடக்கு மண்ணிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து நாளைமறுதினம் திங்கட்கிழமையுடன் 30 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஆனால் இன்னமும் அந்தப் பகுதிகளில் மீள்குடியேற்றம் முழுமையடையவில்லை. அகதிகளாக நண்பர்கள், 15

# வயல் உற்பத்திகளை அதிகரிக்க நடவடிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற்செய்கை மற்றும் மறுவயல் பயிர்ச்செய்கை உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று மாவட்ட செயலர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாய அமைப்புகளின் சம்மேளன பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

நெல் மற்றும் ஏனைய வயல்பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டன. அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறுபோக நெல் அறுவடையின் பின்னர் இலகுவாக நெல் சந்தைப்படுத்தும் சபையால் உரிய நேரத்தில் உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு செய்தல், தட்டுப்பாடின்றி இலவச மானிய உரத்தை சகல பகுதி விவசாயிகளுக்கும் பெற்றுக்கொடுத்தல், சட்டவிரோத மண்அகழ்வை தீவிரமாக தடைசெய்தல், காட்டு யானை தொல்லையிலிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாத்தல், தரமான விதைநெல்லை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுத்தல் என விவசாயிகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளை மாவட்ட விவசாய சம்மேளன பிரதிநிதிகள் மாவட்டச்செயலரிடம் முன்வைத்திருந்தனர்.

இவற்றைக் கேட்டறிந்த மாவட்டச்செயலர் விவசாயிகளின் கோரிக்கைளில் பலவற்றுக்கு உடனடித் தீர்வுவழங்கினார். ஏனைய கோரிக்கைகளுக்கு விரைவான தீர்வைப் பெற்றுத் தருவார் என்றும் உறுதியளித்தார். (து-46)

# எதிர்ப்பை புறக்கணித்து கொவிட் - 19 சிகிச்சைக்கு அக்கராயனே என முடிவு

கிளிநொச்சி, ஜூன் 13

**பொது அமைப்புகளின் கடும் எதிர்ப்பையும் மீறி கிளிநொச்சி அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையை கொவிட் 19 சிகிச்சைக்கான மருத்துவமனையாக சுகாதார அமைச்சு மாற்றியுள்ளது.**

இரு தினங்களுக்கு முன்னர் மத்திய சுகாதார அமைச்சில் நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின் பிரகாரம் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான கலந்துரையாடல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைப் பணிப்பாளர், அக்கராயன்குளம் மருத்துவமனை பொறுப்பு மருத்துவ அதிகாரி, கிளிநொச்சி மாவட்ட இதர மருத்துவமனைகளின் பொறுப்பு மருத்துவ அதிகாரிகள், மருத்துவ நிபுணர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அதில் ஒருமித்த முடிவு எட்டப்பட்டது. இதற்கான பூர்வாங்க செயற்பாடுகள் மத்திய சுகாதார மற்றும் மாகாண சுகாதார திணைக்களங்களின் அறிவுறுத்தலுக்கமைய உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டது.

கொவிட் 19 சிகிச்சை மையத்துக்கான நிர்வாக சேவைகள் யாவும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் கீழ் நடைபெறுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாட்டின் ஊடாக அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையின் சேவைகள் தடைப்படாதவாறு, மருத்துவமனைக்கு அண்மித்த பகுதியில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட இடத்தில் தொடர்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த மருத்துவமனையை கொவிட் 19 சிகிச்சைக்கான மருத்துவமனையாக மாற்றவேண்டாம் என்று அக்கராயன் பொது அமைப்புக்களால் மாவட்டச் செயலரிடம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மனு கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-6)

# 'உயிரிழை'யின் எண்மருக்கு தலா 50,000 ரூபா கடன்

முல்லைத்தீவு, ஜூன் 13

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் பராமரிக்கப்பட்டுவரும் 'உயிரிழை' அமைப்பின் 8 பயனாளிகளுக்கு சுழற்சி முறையிலான கடன் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

உயிரிழை அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நிதி வழங்கப்பட்டுள்ளது. 'அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையம்' 'டைகோனியா' நிறுவனமூடாக தலா 50 ஆயிரம் ரூபாவை வழங்கியது.

இந்த சுழற்சி முறையிலான கடன் திட்டத்துக்கான நிதியை 'அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையம்' சென்ற வருடமும் சுழற்சி முறையிலான கடன் திட்டத்தினூடாக 10 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தது. (து-222)







# யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த மன்னன் சங்கிலியனுக்கு நேற்று நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலிய மன்னனின் 401 ஆவது நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் நேற்று நினைவு கூரப்பட்டது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறைவீதி செம்மணி வீதிச் சந்தியிலுள்ள சங்கிலி மன்னன் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதர் பாலச்சந்திரன், யாழ்ப்பாண மாநகர பதில் முதல்வர் து.ஈசன், மறவன்புலவு சச்சிதானந்தம், மதத்தலைவர்கள் ஆகியோர் நினைவேந்தலில் கலந்துகொண்டனர்.

இதுதவிர, யாழ்ப்பாணம் ஜமுனா ஏரியிலும் மலர் தூவி சங்கிலி மன்னனுக்காக நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் சங்கிலியன். 1519 தொடக்கம் 1561 வரையான காலப்பகுதியில் சங்கிலிய மன்னன் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்தான் என்று வரலாறு கூறுகின்றது. (து-111)

# கற்கைக்கு விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் எந்திரவியற்பட்டமாணிக் கற்கைநெறி மற்றும் விஞ்ஞான பட்டமாணிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அதுமட்டுமன்றி எமது பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் விஞ்ஞான, பொறியியல் அத்திபாரக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்களும் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இக்கற்கைக்குரிய அனைத்து வகுப்புக்களும் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் இடம்பெறும். விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்தள்ள யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திலும் மற்றும் www.ou.ac.lk/onlineapplication எனும் இணையத்தள முகவரிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ)

# வீதிகள் சீரமைப்பின்போது தேவைகள் பற்றியும் ஆராய்வு

கிளிநொச்சி, ஜூன் 13

வட்டக்கச்சியில் பிரதான உள்வீதிகளான ஆறுமுகம் வீதி (பூங்கா சந்தியில் இருந்து சிவன் வீதி வரை), சில்வா வீதி (பூங்கா வீதியில் இருந்து சிவசுந்தரம் வீதி ஆரம்பம் வரை), சிவசுந்தரம் வீதி (சந்தையடியில் இருந்து பூங்கா பின் வீதிவரை) ஆகிய மூன்று வீதிகளும் 'ஐ றோட்' திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படவுள்ளன. 'மாகா' நிறுவனம் இவற்றைச் சீரமைக்கின்றது.

இது பற்றிய மக்கள் சந்திப்பு அங்குள்ள பூங்கா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

சமூகப் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள், மாகா நிறுவன அதிகாரிகள் சகிதம் களப்பயணம் மேற்கொண்டு தேவைகளை இனம்கண்டு அதற்கேற்ப வீதிகளைச் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (கு)



## அ.அட்டைக்கான ஒரு நாள் சேவை மீள ஆரம்பம்

கொழும்பு, ஜுன் 13
ஒரு நாளில் அடையாள அட்டை வழங்கும் சேவை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது. நாட்டில் கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்து இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது இந்தச் சேவை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)

## ஆலயத்தில் கொள்ளை சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 13
யாழ்ப்பாணம் தென்மராட்சி, வரணி வடக்கில் அமைந்துள்ள கும்பிட்டான்புல பிள்ளையார் ஆலயத்தை உடைத்து திருடிய சம்பவம் தொடர்பில் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மந்துவிலை சேர்ந்த 50 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

களவாடப்பட்ட பொருள்கள் சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்படவில்லை. எனினும் பாதுகாப்புக் கமராவில் பதிவாகிய நபர் அணிந்திருந்த ஆடையை ஒத்த காற்சட்டை, ரிசேட் ஆகியவை அவரிடம் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்புக் கமரா பதிவுகளுடன் ஒப்பிட்டு சந்தேகநபரை அடையாளம் காண முடியாத நிலையில், சந்தேகநபரின் கைரேகை அடையாளம் பெறப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆலயத்தில் சங்கிலி, 40 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஐம்பொன்னாலான கலசம் உட்பட ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தன. (எ-159)

# நீதியான தேர்தலுக்கு வாய்ப்புகள் இல்லை!

*கபே அமைப்பின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர்*

**கொழும்பு, ஜூன் 13**

**சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் படி, நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த முடியாது என்று கபே அமைப்பின் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளர், கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.**

இவ்வாறு தேர்தலை நடத்துவதை விட, வாக்குப் பெட்டிகளைக் கட்சி அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்து நிரப்பியனுப்புமாறு கூறுவது நல்லது.

அரசின் பின்னால் இருந்து கொண்டு ஆதரவு வழங்கும் குழுக்களுக்கு, சுகாதாரப் பிரிவினரின் அளவு கோல்கள், பரிந்துரைகள், வழிகாட்டுதல்கள், வாய்ப்பானதாக இருக்கும். தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில பங்கேற்பவர்களின் எண்ணிக்கை தொடர்பாக வகுக்கப்பட்டுள்ள வரையறைகள், நடைமுறைச் சாத்தியமற்றது. தேர்தல் தொடர்பாக முன் அனுபவமில்லாதவர்களின் கணக்கு அது என்று கீர்த்தி தென்னகோன் விமர்சித்துள்ளார். (ஒ.5)

# கூச்சமின்றி சுமந்திரன் பொய் சொல்கின்றார்

*சுரேஸ் பிரேமச்சந்திரன் சாடல்*



யாழ்ப்பாணம், ஜுன் 13
தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் மீது சுமந்திரன் அக்கறை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள கருத்துக்கள் அனைத்தும் பொய்யானவை. அவருடைய கட்சிக்காரரே மறுதலிக்கும் அளவுக்கு கூச்சம் இல்லாமல் பொய்பேசி வருவதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆயுதப் போராட்டத்தை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சாரப்பட பல்வேறுபட்ட கருத்துக்கள் சுமந்திரனால் கூறப்பட்டது. அவரின் இந்தக் கூற்றுத் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்டனம் தெரிவித்தனர். சுமந்திரன் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தலைமைப் பீடத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்திருந்தார்கள். தமிழ் அரசுக் கட்சி மட்டுமல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் கடும் கண்டனங்களை தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரங்களுக்கு பின்னர் யாழ்ப்பாணம் வந்த சுமந்திரன் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தியிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை கட்சியில் இணைத்துக் கொள்வது தொடர்பாக அழுத்தங்களை தான் கொடுத்ததாக தெரிவித்திருந்தார். தான் ஒருவன் மட்டும்தான் முன்னாள் போராளிகளை இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் செயலர் சட்டத்தரணி கே.வி.தவரசா, முன்னாள் போராளிகளை இணைப்பதற்கு கோரிக்கை விடுத்ததாக சுமந்திரன் கூறுவது முழுமையான பொய் என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

போராளிகளை இணைப்பது, இணைக்காமல் விடுவது தொர்டபில் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவும் கூட வவுனியாவில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தங்களுடன் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் பேசியதாகவும், அவர்களை இணைப்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியிலும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடனும் பேசி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

தேர்தலுக்காக நாங்கள் எல்லோரும் போராளிகளுக்காகச் செயற்படுகின்றோம் என்ற தொனியில் கருத்துக்களை வெளியிடுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

உண்மையாகவும் நேர்மையாகவும் போராளிகளை அரசியலில் இணைத்துக் கொள்ளுகின்றார்களா? இல்லாவிட்டால் தேர்தலுக்காக போராளிகளில் கரிசனை உள்ளது போன்று காட்ட முயற்சிக்கின்றார்களா? என்பது முக்கியமான கேள்வியாக தற்போது எழுந்துள்ளது.

ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னவர்கள், ஆயுதம் தூக்கி போராடிய போராளிகளை எவ்வாறு கட்சியில் ஏற்றுக் கொள்வார்கள் என்பது ஒரு முரண்பாடானதும், எள்ளிநகையாடக் கூடியது மான கருத்துக்களாக உள்ளனஎன்றார். (ஒ.5.20)

## பத்தி எழுத்தாளர் ரஜீவ சூட்டுக்காயத்தோடு மீட்பு!

### கைத்துப்பாக்கியும் மீட்பு

கொழும்பு, ஜுன் 13
கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் நேற்றுக் காலை துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இராஜகிரிய பகுதியைச் சேர்ந்த முன்னாள் ஸ்ரீலங்கன் விமான நிறுவன அதிகாரியும், பத்தி எழுத்தாளருமான ரஜீவ ஜயவீர (வயது64) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவரது சடலத்துக்கு கீழிருந்து 9 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான நீதிவான் விசாரணைகளை கொழும்பு பிரதம நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று முற்பகல் நடத்தினார். பின்னர் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கறுவாத்தோட்டப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-22)

பல்கலை பகிடிவதையால்

## கல்வியை இழந்தவர்களில் 84 பேர் மீளிணைய விருப்பு!

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தகவல்*

பல்கலைக்கழக கற்றலை பகிடிவதை காரணமாகத் தொடர முடியாமல் இடைநடுவில் நிறுத்திய மாணவர்களில் 84 பேர், தமக்கு மாற்று வழியை ஏற்படுத்தித் தருமாறு கோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்துள்ளனர். இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் மிகக் குறைந்தளவானோரே விண்ணப்பித்துள்ளனர் என்று ஆணைக்குழு கூறுகின்றது.

பகிடிவதையால் பல்கலைக்கழக கல்வியைத் தொடர முடியாது கடந்த 4 ஆண்டுகளுக்குள் இடை விலகிய மாணவர்களுக்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பகிரங்க விளம்பரப்படுத்தல் ஊடாக இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதனைப் பயன்படுத்தி 84 பேர் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர்.

விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலானவர்கள், பகிடிவதை காரணமாக எந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து விலகினார்களோ அந்தப் பல்கலைக்கழகம் தவிர்ந்த வேறொரு பல்கலைக்கழகத்தில் தமக்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு கோரியுள்ளனர். (ஒ.5.105)

## மீசாலையில் வாள்வெட்டு சகோதரர்களுக்கு காயம்

மீசாலை வடக்கு பூதவராயர் கோவிலடிப் பகுதியில் தேசிய கல்வியியல் கல்லூரியில் கல்வி கற்கும் இறுதியாண்டு மாணவன் மற்றும் அவரது சகோதரர் மீது இனந்தெரியாதோரால் வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை நடந்துள்ளது. பணக் கொடுக்கல் வாங்கல் காரணமாகவே இந்தத் தாக்குதல் நடத்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-9)

## வாழைப்பழத்தின் விலை குடாநாட்டில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.


அண்மையில் வீசிய கடும் காற்றினால் வாழைச் செய்கை குடாநாட்டில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான வாழைகள் குலைகளுடன் முறிந்து நாசமாகியுள்ளன. இதனை அடுத்து வாழைக்குலைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுவே வாழைக் குலைகளின் விலை திடீரென அதிகரித்தமைக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. (ம-17)

*யாழ். நகரில்*

## இருபது இடங்களில் டெங்குக் குடம்பிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ். மாநகர பிரதேசத்தில் இருபது குடியிருப்புக்களில் நுளம்பு குடம்பிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மாநகர சுகாதார பிரிவினர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போதே இந்த நுளம்புக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. நுளம்புக் குடம்பிகள் உடனடியாக அழிக்கப்பட்டன. அந்தக் குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். (ம-17)



# சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க ஒத்துழையுங்கள் மக்களே!

*கோருகின்றார் யாழ். கட்டளைத் தளபதி*

**யாழ்ப்பாணம், ஜூன் 13**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.**

கரணவாய் வடக்கு கரவெட்டி கொற்றாவத்தை ஜே 360 கிராம அலுவலர் பிரிவில் கணவனை இழந்து மூன்று பிள்ளைகளுடன் வாழும் குடும்பத்துக்கு வீடு அமைக்க மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய அடிக்கல் நட்டார்.

அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண குடாநாட்டில் சட்டவிரோதமாக போதைப் பொருள்கள் விற்பனை செய்வோர் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை நாமறிந்த விடயம்தான். எனினும், இது தொடர்பில் பொலிஸாரால் துரிதமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும் பொலிஸார் எம்மிடம் உதவி கோரும் பட்சத்தில் நாங்கள் பொலிஸாருக்கு உரிய உதவிகளை உரிய நேரத்தில் வழங்கி வருகின்றோம்.

இந்த விடயங்கள் தொடர்பில் சாதாரண பொதுமக்களுக்கு நிறையத் தகவல்கள் தெரியும். சட்டவிரோதமான செயற்பாடுகளை நிறுத்த வேண்டுமேயானால் அவை பற்றி பொதுமக்கள் எங்களுக்கு உரிய தகவல்களை வழங்கும்பட்சத்தில்



நாங்கள் பொலிஸாருடன் இணைந்து அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்றார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மக்களுக்கு சமூக வேலைத் திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டு வருகிறார்கள். அவ்வாறான ஒரு வேலைத் திட்டங்களில் ஒன்றுதான் வறிய மக்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் பணி. இன்றுவரை 710 வீடுகளுக்கும் மேல் நாங்கள் வறிய மக்களுக்கு அமைத்துக் கொடுத்திருக்கிறோம். இன்னும் இரண்டு மாதங்களில் இருபது வீடுகளை நாங்கள் கட்டி முடித்து உரிய மக்களுக்கு வழங்கவுள்ளோம் - என்றார். (த)

## மக்கள் முறைப்பாடுகள் செய்ய குறைகேள் அதிகாரி நியமனம்!

கொழும்பு, ஜூன் 13
பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக் குறைகளைக் கேட்டறிந்து உடனடியாக நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்காக குறைகேள் அதிகாரி ஒருவர் ஜனாதிபதி செயலகத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம். விக்ரமசிங்கவே குறைகேள் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிர்வாக அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்போது, அரச அதிகாரிகள் பொறுப்பில் இருந்து விலகி அல்லது அதைத் தாண்டிச் செயற்பட்டிருந்தால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள், அழுத்தங்கள் தொடர்பாகக் கண்டறிந்து தீர்வு வழங்கவே இந்தக் குறைகேள் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் கொழும்பு 1, ஜனாதிபதி மாவத்தையில் பழைய சார்ட்டட் வங்கிக் கட்டடத்தின் 3ஆவது மாடியில் உள்ளது என்றும், பொதுமக்கள் தமது முறைப்பாடுகள் அல்லது குறைகளை நேரிலும், தபாலிலும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் ஒம்புட்ஸ்மன், ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு 1 என்ற முகவரிக்கு தபாலிலும், 0112338073 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமும், ombudsman@presidentsoffice.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் முறைப்பாடுகளையும், குறைகளையும் அனுப்பி வைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

*டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை*

## யாழ். மாநகரப் பகுதியில் 1,693 வீடுகளில் சோதனை

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ். மாநகர பிரதேசத்தில் இடம்பெற்ற டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது ஆயிரத்து 693 வீடுகள் சோதனையிடப்பட்டன. கடந்த 8ஆம், 9ஆம் 10 ஆம் திகதிகளில் இந்த டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நாவாந்துறை மற்றும் யாழ். நகர் ஆகிய இடங்களிலுள்ள ஜே/73, ஜே/74, ஜே/80, ஜே/81, ஜே/82, ஜே/87, ஜே/88 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த சோதனை முன்னெடுக்கப்பட்டது. 107 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்க ப்பட்டது. (ம-17)

## பனம்பொருள் உற்பத்திகளின் ஏற்றுமதியை அதிகரிக்கத் திட்டம்

*பனை அபிவிருத்திச் சபை தரக் கட்டுப்பாட்டாளர் ஸ்ரீ விஜேந்திரன் சுட்டிக்காட்டுகின்றார்*

யாழ்ப்பாணம், ஜூன் 13
பனங்கிழங்கு சார்ந்த உற்பத்திகள், பனம் பொருள்கள் சார்ந்த உற்பத்திகள், பனம்பழம் சார்ந்த ஐஸ்கிறீம், யோகட் மற்றும் குடிநீர் அதேபோல் பனங்கிழங்கு சார்ந்த பெறுமதி வாய்ந்த உற்பத்திகள் என்பனவற்றை சந்தைப்படுத்தக் கூடியநிலை தற்போது காணப்படுகின்றது. இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குரிய வழிவகைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார், பனை அபிவிருத்திச்சபையின் ஆராய்ச்சி நிலைய தரக்கட்டுப்பாட்டாளரும் ஆராய்ச்சியாளருமான எஸ். ஸ்ரீ விஜேந்திரன்.

பனை ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்காசியாவிலேயே அதிக வினைத்திறன்கொண்ட ஓர் ஆராய்ச்சி நிலையமாக பனை ஆராய்ச்சி நிலையம் விளங்குகின்றது. தரநிர்ணயம், பிரயோக ஆராய்ச்சிகள் போன்றனவற்றை கைதடியிலுள்ள இந்த நிலையத்தில் மேற்கொள்ள முடியும். பனைத்தொழில் உற்பத்தியை மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கு உரிய ஆலோசனைகள் மற்றும் அவர்களுக்கான வழிவகைகளையும் இது ஏற்படுத்திக் கொடுக்கின்றது. தேவையானோர் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பனை ஆராய்ச்சி நிலையம் ஊடாகவும் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பனை சார்ந்த உற்பத்திகளில் பொதுவாகவே ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. அதாவது சிறந்த போசனைக் கூறுகள், மருத்துவ குணங்கள் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

பனம் பழத்திலிருந்து பெறப்படும் ஐஸ்கிரீம் உள்ளிட்ட தின்பண்டங்களை எதிர்காலத்தில் சதொச நிறுவனம் ஊடாக விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (த-111)

# தனிமைப்படுத்தலை முடித்த 7 பேர் வவுனியா திரும்பினர்

வவுனியா, ஜூன் 13
இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய வவுனியாவைச் சேர்ந்த 7 பேர் தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்து வீடுகளுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர்.



இந்தியாவுக்கு சென்ற நிலையில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாடு திரும்பமுடியாத நிலையில் இருந்த பலர் அரசால் அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். மின்னேரியா தனிமைப்படுத்தல் முகாமில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் கொரோனாத் தொற்றுக்குரிய அறிகுறிகள் தென்படவில்லை. இதையடுத்து அவர்கள் நேற்று வவுனியா திரும்பினர். (ம-18)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# "ஓப்பினிங் எல்லாம் நல்லாத்தான் இருக்கு"

இம்மாதம் 29 ஆம் திகதி முதல் சகல தனியார் கல்வி நிறுவனங்களும் இயங்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. ஆயினும் இறுக்கமான சுகாதார நடைமுறைகள் ஒவ்வொரு தனியார் கல்வி நிறுவனத்திலும் பேணப்படுவதை உறுதி செய்த பின்னரே அவை இயங்க அனுமதிக்கப்படும் என்றும், அவ்வாறு சுகாதார வசதிகளைக் கொண்டிராத தனியார் கல்வி நிறுவனங்களின் அனுமதி நிறுத்தப்படும் எனவும் சுகாதாரத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

ஒரு படத்தில் வடிவேலு "ஓப்பினிங் எல்லாம் நல்லாத்தான் இருக்கு, ஆனா பினிஷிங் தான் சரியில்லையேப்பா" என்று சொல்வதைப் போல, சுகாதாரத் திணைக்களமும் கொரோனா ஒழிப்பு விடயத்தில் நடந்துகொள்வதால், தனியார் கல்வி நிறுவனங்களும் அதே வகைக்குள் அடங்கிவிடுமோ என்று யோசிக்கத் தோன்றுகின்றது. ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டு, இயல்பு நிலை கொண்டுவரப்படுவதாக அறிவிக்கப்பட்டவுடன் வங்கிகள், அலுவலகங்கள், கடைகள், சந்தைகள் என்பவற்றில் கை கழுவும் வசதி, தனியாள் இடைவெளி பேணல், வளிச்சீராக்கிகளின் பயன்பாட்டுக்குத்தடை என்று ஏகப்பட்ட அலப்பறைகளைச் சுகாதாரத் திணைக்களம் போட்டது. ஆனால் கழுதை தேய்ந்து கட்டெறும்பானதை கதையாக, ஓரிரு நாள்களுக்கு மட்டுமே கண்ணும் கருத்துமாகக் கடைப்பிடிக்கப்பட்ட இந்தச் சுகாதார நடைமுறைகள்,பின்னர் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. இப்போது பெரும்பாலான அலுவலகங்களின் முன்புறத்தே கைகழுவும் வசதி எங்கே உள்ளது என்று மை போட்டுத்தான் கண்டுபிடிக்க வேண்டும், அத்தோடு தனியாள் இடைவெளி அறவே பேணப்படுவது கிடையாது. 'இந்த வெக்கைக்குள்ள எப்பிடி 'ஏசி' போடாம வேலை செய்யிறது" என்று வளிச்சீராக்கிகளும் பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. சந்தைகள், கடைகள் என்று பார்க்குமிடமெல்லாம் கூட்டம் கூட்டமாக நெருக்கியடித்தபடி தான் எல்லோரும் தத்தம் அலுவல்களைப் பார்க்கிறார்கள். எல்லோரும் கிட்டத்தட்ட கொரோனாவையும் கூடவே சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுரைகளைகளையும் மறந்துவிட்டார்கள். சுகாதாரத்துறையினரும் " நாங்கள் எப்படி கொரோனாவைத் தடுக்கலாம் என்று நிபந்தனைகள் தான் போடுவோமே தவிர அதெல்லாம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பது பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளவே மாட்டோம்" என்கிற ரீதியில் தான் செயற்படுகின்றனர். எந்தவொரு கண்காணிப்பு நடவடிக்கையும் பெரும்பாலான இடங்களில் இல்லை. மூன்று பேர் மூக்குக் கீழே மாஸ்க் போட்டதால் சந்தைக்குச் சீல் வைத்து கொலரைத் தூக்கிவிட்டுக் கொண்டிருக்கும் சுகாதாரத் துறையினர், ஏனைய இடங்களில் , குறிப்பாக அரச அலுவலகங்களில் இந்தச் சுகாதார நடைமுறைகள் தூக்கியெறிப்பட்டுள்ளதையும், அங்கு சேவை பெற வரும் மக்கள் சுகாதார நடைமுறைகளென்றால் "கிலோ என்ன விலை ?" என்பது போல நடந்து கொள்ளவதையும் கண்டுகொள்வதே இல்லை.

இப்படி கடுமையான சட்டதிட்டங்களைச் சொல்லிவிட்டு அவை சரிவரப் பேணப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்காமல் விட்டால், அந்தச் சட்டதிட்டங்களால் என்ன பயன்? ஆனால் இந்த விளையாட்டை பாடசாலைகளிலோ, தனியார் கல்வி நிறுவனங்களிலோ விடமுடியாது. ஏனெனில் அங்கு குறுகிய இடத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் நீண்ட நேரம் கூடியிருந்து கல்வி கற்கப்போகின்றார்கள். எனவே கண்ணை மூடாமல் அவதானித்துக்கொண்டே இருக்க வேண்டும். மாறாக முன்னரைப் போல பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் சுகாதார நடைமுறைகள் ' கைகழுவப்படுமானால்' ஏதோ ஒருவழியில் கொரோனா மீண்டுமொருமுறை மாணவர்கள் ஊடாக தன் சுற்றுலாவை ஆரம்பித்துவிடும். அத்தோடு தங்களுக்கு கொரோனா வந்தால் கூட தாங்கிக்கொள்ளும் பெற்றோர், பிள்ளைகளுக்கு வந்துவிட்டால் குறித்த கல்வி நிறுவனத்தை ஒருவழி பண்ணிவிடுவார்கள். பெரியவர்களே சுகாதார நடைமுறைகளை மதிக்காதபோது, ஏதுமறியாப் பிள்ளைகள் அவற்றைத் தாமாகவே உணர்ந்து கடைப்பிடிப்பதும் கடினமே. எனவே ஜூன் 29 முதல் மீள ஆரம்பிக்கவுள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் சுகாதார நடைமுறைக்கான வசதிகள் தொடர்ச்சியாகச் செய்யப்படுகின்றனவா, அந்த நடைமுறைகள் பேணப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க ஒரு பொறிமுறை சுகாதாரத்துறை உருவாக்கவேண்டும். எல்லா இடங்களிலும் கண்காணிக்க சுகாதாரத்துறையினரிடம் ஆளணிப் பற்றாக்குறை உண்டு. எனவே தனியார் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள் என்பவற்றில் ஆசிரியர், பெற்றோர், ஓய்வுபெற்ற சுகாதாரத்துறைப் பணியாளர்கள், நலன்விரும்பிகள் என்போரைக் கொண்ட குழுவை அமைத்து , அந்தக் குழு மூலம் ஒவ்வொரு கல்வி நிறுவனத்தையும் கண்காணிக்க முடியும். அந்தக் குழுவிடம் தினமும் அறிக்கையைப் பெற்று , சுகாதார விதிகள் மீறப்படும் இடங்களுக்கு சுகாதாரத்துறையினர் நேரடியாகச் சென்று நடவடிக்கையும் எடுக்க முடியும். இத்தகையை கூட்டிணைப்பை ஏற்படுத்தினால், "ஓப்பினிங்கும் நல்லா இருக்கும், பினிஷிங்கும் நல்லா இருக்கும்".

# பாடசாலைகள் மூடப்படுகின்றமையை தடுக்க ஆசிரியர்களே கைகோருங்கள்!

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் அழைப்பு



மன்னார், ஜூன் 13

**கிராமங்களில் பாடசாலைகள் மூடப்படும் நிலைமையை மாற்றியமைப்பதற்கு ஆசிரிய சமூகம் சுயவிருப்புடன் கைகோர்க்க வேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.**

மன்னார் மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் வடக்கு மாகாண மாணவர்களை மேம்படுத்தும் வகையில் இடம்பெற்ற ஆங்கில மொழிச் செயற்றிட்ட அங்குரார்ப்பண நிகழ்வும் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வியொன்றுதான் ஒரு நாட்டையும் சமுதாயத்தையும் மாற்றுகின்ற முக்கியமான கருவி என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். கல்வியையும் நிபுணத்துவத்தையும் இலங்கையின் ஏனைய பிற மாகாணங்களுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்று பரப்பியவர்கள் நமது மாகாணத்தைச் சேர்ந்த கல்விமான்கள். அப்பேர்ப்பட்ட கல்விமான்களைக் கொண்டிருந்த எமது மாகாணத்தின் தற்போதைய கல்வியின் நிலை மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது. எமது சமூகம் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பல கிராமங்களில் பாடசாலைகள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை குறைந்துகொண்டிருக்கிறது. விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் போன்ற முக்கியமான பாடங்களைப் படிக்க மாணவர்கள் முன்வருகின்றமையும் குறைவடைந்து செல்வதால் பதவிவெற்றிடங்களை நிரப்ப முடியாததொரு நிலையும் காணப்படுகின்றது.

கல்வி இல்லாமல் எந்தவொரு நிர்வாகத்தையும் கட்டியெழுப்ப முடியாது. இந்த நிலையை மாற்ற வேண்டும். அதற்காக அர்ப்பணிப்புடன் அனைவரும் கைகோர்க்க வேண்டும். அந்தப் பயணத்தில் ஆசிரியர்கள் சுயவிருப்பத்துடன் இணைவதோடு மட்டுமல்லாது கல்வியின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் தெளிவுபடுத்தி கல்வியுடன் வெளியுலக அறிவையும் மாணவர்களுக்கு வழங்கி எமது மாகாண வளர்ச்சிக்கு ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# தனியார் நிறுவனம் மீது கும்பல் தாக்குதல்

## பணியாளர் காயம், சொத்துக்களும் சேதம்

கொடிகாமம், ஜூன் 13

தனியார் நிறுவனம் ஒன்றின் மீது இனந்தெரியாத வாள்வெட்டுக் குழுவொன்று தாக்குதல் மேற்கொண்டுள்ளது. இதனால் நிறுவனத்தின் பணியாளர் வாள்வெட்டுக்கு இலக்கானார். நிறுவனத்தின் சொத்துக்கள் பலவும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கொடிகாமம் மிருசுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரவு 11.40 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வாள், இரும்பு கம்பி மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வந்திறங்கிய 8 பேர் கொண்ட குழுவினர் அங்கிருந்த கண்காணிப்பு கமராக்களை அடித்துடைத்துள்ளனர்.

இதன் பின்னர் அங்கிருந்த பணியாளர் ஒருவர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து அங்கிருந்த பொருள்களை அடித்து உடைத்து நாசம் செய்த கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்ட போதும் பொலிஸார் அதிகாலை 3 மணியளவிலேயே சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-20)



# உழவு இயந்திரத்தால் மோதி பசு கொலை!

## சாரதிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைப் பகுதியில் உழவு இயந்திரத்தால் மோதி பசு மாடு ஒன்றை கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட உழவு இயந்திரத்தின் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையில் வீதியைக் கடந்த பசு மாடு ஒன்றை அந்த வழியால் மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரம் மோதியது. பசு மாடு உழவு இயந்திரத்தின் சில்லுக்குள் நசியுண்டு உயிரிழந்தது. இந்தச் சம்பவம் கடந்த மே 18ஆம் திகதி நடைபெற்றது. சம்பவத்தையடுத்து அந்த இடத்திலேயே உழவு இயந்திரத்தைக் கைவிட்டு அதில் பயணித்த மூவரும் தப்பித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் அந்தப் பகுதியிலிருந்த .சிசிரிவி கமரா பதிவின் அடிப்படையில் கடந்த 20ஆம் திகதி சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவர் யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்தநிலையில் உழவு இயந்திரத்தைச் செலுத்திச் சென்ற சாரதி எனக் குறிப்பிட்ட நபர் தனது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை சரணடைந்தார். சந்தேகநபரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என்பதும் மன்றிடம் சுட்டிக்காட்டப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.பீற்றர் போல், இரண்டாவது சந்தேகநபரையும் எதிர்வரும் ஜூன் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ-20)

# கிரவல் அகழ்வை தடுத்து நிறுத்துங்கள்

## புத்துவெட்டுவான் கிராம அமைப்புக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூன் 13**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புத்துவெட்டுவான் கிராம அலுவலர் பிரிவின் எல்லைப் பகுதிக்குள் இடம்பெறும் கிரவல் அகழ்வு காரணமாக தாம் பல்வேறு பாதிப்புகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் எனவும் இந்த நடவடிக்கையை மிக விரைவில் தடுத்து நிறுத்துமாறும் கிராம பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.**

இந்த விடயம் தொடர்பில் புத்துவெட்டுவான் கிராம அலுவலர் பிரிவின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தெரிவித்ததாவது;



புத்துவெட்டுவான் கிராம எல்லைக்கு உட்பட்ட வனப்பகுதியில் அதிகளவான ஆழத்தில் இந்தக் கிடங்குகள் வெட்டப்படுகின்றன. இதனால் குறித்த பகுதியால் எமது பகுதிக்குள் இருக்கின்ற இரண்டு குளங்களுக்கு தண்ணீர் வரத்துத் தடைப்பட்டுள்ளது. குறித்த பகுதியை தாண்டி தண்ணீர் வராது. அந்த இடத்தில் குளம் போன்று தண்ணீர் தேங்குகின்றது. அதிலிருந்து தண்ணீர் தங்களுடைய பகுதிக்கு வராமல் வேறு திசை நோக்கித் திரும்பி அக்கராயன் குளத்துக்குச் சென்றுவிடுகின்றது. இது எதிர்காலத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பாகவுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பிரதேச செயலகத்தில் கேட்டபோது, தங்களுக்கு எதுவும் தெரியாது எனவும் தாங்கள் அனுமதி வழங்கவில்லை எனவும் தெரிவித்தனர். மாவட்ட செயலகத்திலும் தொடர்பு கொண்டோம். இந்த விடயம் தெரியாது எனவும் தாங்கள் அனுமதி வழங்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

வனப்பகுதிக்குள் நேரடியாக கனியவள திணைக்களம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது. எனவே இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ப-19)



# வவுனியாவில் சமல் ராஜபக்ஷ!

வவுனியா, ஜூன் 13

விவசாய நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷ வவுனியாவுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்திருந்தார்.

வவுனியா போகஸ்வெவ பகுதிக்கு பயணம் செய்த அவர் அந்தப் பகுதியில் உள்ள மகாகம்பிலிவெவ குளத்தின் சீரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த குளம் 3 கோடியே 20 லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளதுடன், அதன் மூலம் 400 ஏக்கர் வரையிலான விவசாய செய்கையை முன்னெடுக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குளத்தின் சீரமைப்புப் பணிகளை ஆரம்பித்துவைத்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் "இந்தக் குளத்தை சீரமைப்பதன் மூலம் இரு போகங்களுக்கு மாத்திரம் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு அப்பால் 12 மாதங்களும் இந்த மக்கள் உணவுத்தேவையை பெறக் கூடியதாக இருக்கும்.

மகாவலி எல் வலயத்தில் குறித்த பகுதி மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் மகாவலி தண்ணீர் எப்போது வரும் என்று கோரிக்கை முன்வைக்கின்றனர். அதனையும் கருத்தில் எடுத்தே இந்தத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது" -என்றார். (ஐ-110)



# பள்ளிகளிலும் லுகர் தொழுகை

நாட்டிலுள்ள சகல மத தலங்களை நிபந்தனைகளோடு திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ள நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைமுறையில் ரீதியில் பள்ளிவாசல்களில் லுகர் தொழுகை தனித் தனியாக இடம்பெற்றது.

அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பள்ளிவாசல்களில் லுகர் தொழுகையில் தனித் தனியாக ஈடுபட்டனர். இதன்போது அரசு மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய தனிநபர் தொழுகைக்காக பள்ளிவாசல்கள் திறக்கப்பட்டு ஒரே நேரத்தில் 50 பேருக்கு குறைவானோர் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் தொழுகைக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பள்ளிவாசலினுள் இருக்கின்றபோது ஒவ்வொருவரும் முகக் கவசத்தை அணிந்திருந்ததோடு, ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணும் வகையில் இறை கடமையில் ஈடுபட்டனர். பள்ளிவாசல்களை திறப்பதற்கு முன்னர் அந்தந்த பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியைப் பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ப)

# கட்டுப்பாடு தளர்ந்தமையால் சுமுகநிலையில் வழிபாடுகள்

கொரோனா கட்டுப்பாட்டை அடுத்து ஆலயங்களுக்கு உள்ளே சென்று வழிபடுவதற்கு நேற்றுமுதல் அனுமதி வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அநேகமான இந்து ஆலயங்கள் நேற்றுக்காலை திறக்கப்பட்டு சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

சுகாதார விதிகளுக்கு அமைய மக்கள் ஆலயங்களுக்கு உள்ளே சென்று வழிபாடுகளில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். தனியாள் இடைவெளியைப் பயன்படுத்தி பூசை வழிபாடுகளில் கலந்துகொள்ளவும் அறிவுறுத்தப்பட்டனர். வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும் மக்கள் பூசை வழிபாடுகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். (ப-17)

# விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மீட்பு

கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வாகனேரி குளத்து மடு பகுதியில் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட சில ஆயுதங்கள் நேற்று மீட்கப்பட்டன.

வாழைச்சேனை கடதாசி ஆலைபுலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது விடுதலைப் புலிகளின் முகாம் இருந்த பகுதியில் சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதில் 5 கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களை கொண்டு செல்வதற்காக அணியும் ஆடை ஒன்றும் மீட்கப்பட்டன என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# சிறுவர் வன்முறைக்கு எதிராக விழிப்புணர்வு

வவுனியா, ஜூன் 13

போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர் உரிமை மற்றும் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்று வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலகத்தில் சிறுவர் உரிமை மற்றும் வன்முறை தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் இடம்பெற்றதுடன் வவுனியா நகரில் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன. வவுனியா பழைய பேருந்து நிலையம், தபாலகம், மருத்துவமனை போன்றனவற்றின் முன்பாக வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வுஸ்ரிக்கர்களை முச்சக்கர வண்டிகளுக்கு ஒட்டினர். இதில் உள்ளூராட்சி மன்றங்களின் பெண் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ப)



## சீனாவிலிருந்து வந்த கொள்கலன் பெட்டிக்குள் அரிய வகை உடும்பு

கொழும்பு, ஜூன் 13

சீனாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட கொள்கலனில் இருந்த அரிய வகை உடும்பை வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

ஏக்கல பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான தொழிற்சாலைக்கு மூலப் பொருள்களை எடுத்து வந்த கொள்கலன் பெட்டியிலேயே இந்த விலங்கு இருந்துள்ளது.

வன உயிரிகள் திணைக்களத்துக்கு அறிவித்த பின்னர், முத்துராஜவெல அதிகாரிகள் அதனை தமது பொறுப்பில் எடுத்துள்ளனர். ஏக்கல பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனம் வழங்கிய தகவலுக்கு அமைய அங்கு சென்று அந்த விலங்கை தாம் பொறுப்பேற்றுக்கொண்டதாக வன உயிரிகள் திணைக்களத்தின் மேல் மாகாண உதவிப் பணிப்பாளர் சட்டத்தரணி லலித் விக்ரமராச்சி தெரிவித்துள்ளார். இந்த விலங்கு இலங்கையில் அரிதாகக் காணப்படும் உடும்பு விலங்கு குடும்பத்தைச் சேர்ந்த குட்டி என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த உடும்புக் குட்டி கொள்கலன் பெட்டிக்குள் சென்றதா அல்லது சீனாவில் இருந்து வந்ததா என்பதை இதுவரை உறுதியாகக் கூற முடியாதுள்ளது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

### வடக்கு மாகாணத்தில்

# கைவிடப்பட்ட அரச கட்டடங்களின் விவரங்களைத் திரட்ட நடவடிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 13**

**வடக்கு மாகாணத்தில் கடந்த 10 வருடங்களில் பல்வேறு அரச நிறுவனங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்ட கட்டுமானங்களில் பாவனையின்றி அல்லது கைவிடப்பட்ட நிலையில் உள்ள கட்டடங்களின் விவரங்கள் கணக்கிடப்படவுள்ளன.**

வடக்கு மாகாணத்தில் சுகாதார அமைச்சு, உள்ளூராட்சி அமைச்சு, கல்வி அமைச்சு, விவசாய அமைச்சுக்களின் கீழ் உள்ள திணைக்களங்களில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டுமானத் திட்டங்கள் பல பாவனையின்றி உள்ளன எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் இவ்வாறு கைவிடப்பட்ட கட்டடங்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்கள் ஊடாகப் பெறுவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, நிரல் அமைச்சுக்களின் நிதி, மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும் உள்ளூராட்சி நிதிகளுக்கூடாக முன்னெடுக்கப்பட்ட கட்டுமானத் திட்டங்களே பல பாவனையற்ற நிலையில் உள்ளன என அறியப்பட்டுள்ளது. இவ்வாறு பாவனையற்றுள்ள கட்டடங்களின் முழுமையான விவரங்கள் தொகுக்கப்பட்ட பின் அக் கட்டடங்களை மீள அமைப்பது தொடர்பில் வடக்கு ஆளுநரால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் எவ்வகையான உட்கட்டுமானத் திட்டங்களாயினும் அவற்றை மக்கள் பங்கேற்புடன் முன்னிலைப்படுத்தியே முன்கொண்டு செல்லவும் திட்டமிடப்படடுள்ளது. (ப-50)

### மத்திய வங்கி

## கடப்பாட்டிலிருந்து விலகவே முடியாது

*கோத்தா இறுக்கமான கட்டளை*

கொழும்பு, ஜூன் 13

ஈ.ரி.ஐ. நிதி நிறுவனத்தில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படும் முறைகேடுகள் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவைச் சந்தித்தது.

இந்த நிறுவனம் ஆரம்பம் முதலே முறையாகச் செயற்படவில்லை என்று குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். நிறுவனத்தின் சொத்துக்கள் வேறு நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. அவை மத்திய வங்கியின் உரிய கண்காணிப்புக்கு உட்படவில்லை என்றும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

முறைகேடுகள் பற்றி மேலும் கண்டறியுமாறு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, மக்களின் வைப்புப் பணத்தை உடனடியாக மீளச் செலுத்துவது குறித்து அதிக கவனம் செலுத்துமாறும் குறிப்பிட்டார். இடம்பெற்றுள்ள முறைகேடுகள் குறித்த பொறுப்பிலிருந்து மத்திய வங்கியால் விலகிக் கொள்ள முடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். நிதி நிறுவனமொன்றில் ஏதேனும் முறைகேடுகள் இடம்பெறுமானால் வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கான கடப்பாட்டை மத்திய வங்கி கொண்டுள்ளது. அந்தப் பொறுப்பை மத்திய வங்கி நிறைவேற்றவில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ப)

## பாதிப்புக்களிலிருந்து மீளுவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு உதவிகள்

*வெளிநாட்டு உறவுகள் அமைச்சு தகவல்*

கொழும்பு, ஜூன் 13

கொவிட்19 தொற்றுப் பாதிப்புக்களிலிருந்து மீளுவதற்காக இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு உறவுகள் அமைச்சு உதவுவதாக அமைச்சின் பொருளாதார விவகாரங்கள் பிரிவின் மேலதிக செயலர் பி.எம்.அம்சா தெரிவித்தார்.

தொலைக்காட்சி நேர்காணலின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பாதிப்புக்களிலிருந்து மீளுவதற்காக, ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் தேயிலை சபை போன்ற முகவர் நிறுவனங்களுடன் இணைந்து அமைச்சின் 'பொருளாதார இராஜதந்திரத் திட்டம்' இலங்கை ஏற்றுமதியாளர்கள் கொவிட்-9 தொற்றுநோயின் பாதிப்புக்களிலிருந்து மீண்டு, ஏற்றுமதிகளை மேற்கொள்வது தொடர்பில் ஒரு முக்கிய வினையூக்கியாக செயற்பட்டு வருகின்றது. உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் மற்றும் பரிமாற்றம் செய்து விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளுக்கான இடையூறுகள் உட்பட சவாலான சூழ்நிலைகள் இருந்தபோதிலும், அமைச்சு மற்றும் வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களின் உறுதியான நிலைப்பாட்டின் காரணமாக, புதிய சந்தை இலக்குகள் தோற்றுவிக்கப்பட்டு, தேயிலை, ரப்பர் மற்றும் புதிய பதப்படுத்தப்பட்ட உணவு போன்ற இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருள்களுக்கான சந்தைகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உலகளாவிய ரீதியில் வளர்ந்துவரும் கொவிட்19 சூழ்நிலையின் விளைவாக, குறிப்பாக தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ரப்பர் சார்ந்த தயாரிப்புக்கள் (முகமூடிகள் - 12 சந்தைகள், பாதுகாப்பு ஆடைகள் 17 சந்தைகள், ரப்பர் கையுறைகள் - 12 சந்தைகள், கை தொற்று நீக்கி சுத்திகரிப்பான்கள் - 12 சந்தைகள்) போன்ற புதிய தயாரிப்புக்கள் மற்றும் சந்தைகளை இலக்காகக் கொள்வதற்கு இலங்கைக்கு இயலுமாக அமைந்தது.

அமைச்சின் தலையீடுகளால், இந்தச் சவாலான சூழ்நிலையில், 344 மெட்ரிக் டொன் மற்றும் 220 மெட்ரிக் டொன் இலங்கைத் தேயிலை முறையே துருக்கி மற்றும் எகிப்துக்கும், 30 மெட்ரிக் தொன் உறைந்த உணவுகள் ஓமானுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன- என்றார். (ப)

## இளைஞர்களுக்கு காயம்!

சாவகச்சேரி, ஜூன் 13

வேகமாக ஓடிவந்த நாய் குறுக்கே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் அதில் பயணித்த 20 வயதுடைய இரு இளைஞர்கள் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கைதடி கிழக்கில் இடம்பெற்றது. காயமடைந்த இரு இளைஞர்களும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-9)



## பள்ளிவாசல்களில் துப்புரவுப் பணி

ஓட்டமாவடி, ஜூன் 13

கொரோனாத் தொற்றுக் காரணமாக நீண்ட நாள்களாக மூடப்பட்டிருந்த பள்ளிவாசல்களை துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள சகல மத வழிபாட்டிடங்களையும் நிபந்தனைகளோடு திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. மூடப்பட்ட பள்ளிவாசல்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி 3 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல்களை அந்தப் பகுதி இளைஞர்கள் ஒன்று சேர்ந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை துப்புரவு செய்தனர். (ஐ)

## கஞ்சா வியாபாரி கைது என்கின்றது பொலிஸ்

மட்டக்களப்பு, ஜூன் 13

கஞ்சா வியாபாரி ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுணதீவு சிறப்பு அதிரடிப்படை பொறுப்பதிகாரி எச்.வி.எல். விஜயரத்ன தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவு மற்றும் மட்டக்களப்பு இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுணதீவு சிறப்பு அதிரடிப்படையினரின் உதவியுடன் ஓட்டமாவடி மாஞ்சோலை பகுதியில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ஒரு கிலோ 775 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர் வாழைச்சேனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் இதற்கு முன்னரும் பல தடவைகள் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவர் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார். (ப-150)

# பூசை நடத்தி பருத்தித்துறை கடலில் வெளிமாவட்ட மீனவர்கள் மீன்பிடி

**யாழ்ப்பாணம், ஜூன் 13**

**பருத்தித்துறை கொட்டடி கடற்பரப்பில் கடலட்டை பிடிக்க வந்த வெளிமாவட்ட மீனவர்கள், பூசைகளை மேற்கொண்டு தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்த சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. வெளிமாவட்ட மீனவர்களுடைய இந்தச் செயலை வடமராட்சி வடக்கு மீனவர்கள் கடுமையாகக் கண்டித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு கடிதத்தையும் அனுப்பி வைத்துள்ளனர்.**

கடந்த காலங்களில் வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் கடலட்டைத் தொழிலில் ஈடுபட்ட நிலையில் பெரும் முயற்சியாலும் மருதங்கேணி பிரதேச செயலாளரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டும் மீனவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

தற்போது பருத்தித்துறைக்கு வந்துள்ள வெளிமாவட்ட மீனவர்கள் பருத்தித்துறை, கொட்டடி கடற்கரையில் கடல் அட்டை பிடிக்கும் தமது தொழில் நடவடிக்கைகளை பூசை நிகழ்வுகளுடன் ஆரம்பித்துள்ளனர்.

பொழுதுபோக்கு கடற்கரையாகக் காணப்பட்ட இடத்தில் எந்த அனுமதியும் இல்லாமல் கடற்கரையை தமக்கு ஏற்றாற்போல் பயன்படுத்துகின்றனர். கூடாரங்களை அமைத்து, பெரும் சூளைகள், எரிப்பதற்கான விறகு மட்டைகள் எனபவற்றைக் குவித்துள்ளனர். இந்தச் சம்பவம் பருத்தித்துறை மீனவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் ஒருவர் கடற்றொழில் அமைச்சராக இருக்கும்போதும் வெளிமாட்ட மீனவர்கள் தமிழ் பிரதேசங்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றமை தொடர்பில் மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

'வெளிமாவட்ட மீனவர்கள் வாடி அமைத்து அட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் எமது பகுதி கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. கடல் வளமும் அழிவடைகின்றது. சிறு தொழிலையே செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வானது எதிர்காலத்தில் சூனியமாகிவிடும்.

வெளிமாவட்டத் தொழிலாளர்களின் வருகையால் தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் 19 நோயானது எமது வடமராட்சிப் பிரதேசத்தில் பரவுவதற்கு ஏதுவாக இருக்கும்.

வெளிமாவட்ட தொழிலாளர்களை தொழில் செய்யாது தடை செய்து எமது நகர பிரதேசத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும்' என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பான கடிதத்தை தவிசாளர், மாவட்டச் செயலர், பிரதேச செயலர் ஆகியோருக்கு அனுப்பி வைத்தனர்.

வெளிமாவட்ட மீனவர்களுக்கான அனுமதி பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றும், கடற்கரைப் பகுதியில் வாடி அமைத்து தொழில் புரிய 30 படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் கடற்றொழில் திணைக்கள வட்டாரங்களால் தெரிவிக்கப்படுகிறது. (ப-105,26,6)

# கொரோனாவால் வாழ்வாதாரம் படுபாதாளத்தில்

## திருமுறிகண்டி வர்த்தகர்களின் பரிதாப நிலைமை

கிளிநொச்சி, ஜூன் 13

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் உள்ள 65 வர்த்தக நிலைய உரிமையாளர்கள் வாழ்வாதார ரீதியில் தாம் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு வருகை தரும் பொதுமக்கள், பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளமையாலும், கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்ட காலப்பகுதியில் கடைகள் மூடப்பட்டமையாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கோவில் வளாகத்தின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடை காரணமாக அந்தப் பகுதிக்கு மக்கள் வருகை தருவதில்லை எனவும் அந்தத் தடையானது பிரதேச சபையாலோ அல்லது சுகாதாரப் பிரிவினராலோ கோவில் நிர்வாகத்தினராலோ அமைக்கப்படவில்லை என்றும் வர்த்தகர்கள் குற்றம் சாடுகின்றனர். வருகைதரும் மக்களும் சுதந்திரமாக அந்தப் பகுதியில் நடமாட முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

'சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே வர்த்தகச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வீதித் தடையானது எமது வாழ்வாதாரத்தை மேலும் பாதிப்படையச் செய்துள்ளது.

ஏற்கனவே எமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வீதித் தடையானது மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

உரிய தரப்பினர் இந்த விடயங்களில் கவனமெடுத்து எங்களின் வாழ்வாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உதவிகளை மேற்கொள்ள வேண்டும்' என்று அந்த வர்த்தகர்கள் மேலும் தெரிவித்தனர். (ப-6)

## உடைமையில் கசிப்பு இருவர் கைதாகினர்

கிளிநொச்சி, ஜூன் 13

கசிப்பு மற்றும் கோடாவை உடைமையில் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு பகுதியிலேயே மேற்படி கைதுகள் இடம்பெற்றுள்ளன. விசாரணைகளை அடுத்து இருவருக்கும் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றில் முற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-6)

## பாடசாலைகளைத் தயார்ப்படுத்த கல்வித் திணைக்களத்தால் நிதி

கொழும்பு, ஜூன் 13

வைரஸ் தொற்றுக் காரணமாக, மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு முன்னதாக, வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணப் பாடசாலைகளைத் தயார்படுத்தும் பொருட்டு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கு நிதி வழங்கியுள்ளது.

இந்த நிதிகளைப் பயன்படுத்துவது தொடர்பில், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நிதிகள் சம்பந்தப்பட்ட 17 வலயக் கல்வி அலுவலகங்களினூடாக, கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் வங்கிக் கணக்குகளுக்கு தனித்தனியாக வைப்பிலிடப்பட்டுள்ளது. 457ஆரம்பப் பாடசாலைகளும், 657 இரண்டாந்தரப் பாடசாலைகளும் நன்மையடைந்துள்ளன. பாடசாலைகளுக்கு தலா ஆயிரத்து 250 ரூபா முதல் 16 ஆயிரம் ரூபா வரை நிதி வழங்கப்பட்டுள்ளது. (ப)

# முழுமையாக உதவுகின்றேன் பெறுபேறுகளைக் காட்டுங்கள்

## *ஏற்றுமதியாளர்களுக்கு ஜனாதிபதி தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 13

ஏற்றுமதித் துறையின் பிரச்சினைகள் மற்றும் தடைகளைச் சரியாக இனம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு முழுமையான உதவியை வழங்க அரசு தயாராகவுள்ளது. அதற்குரிய பெறுபேறுகளை ஏற்றுமதியாளர்கள் காண்பிக்கவேண்டும். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



ஏற்றுமதி வியாபாரத்துறை முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளை இனம் காண்பதற்கு அந்தத் துறையின் முன்னணி வர்த்தகர்களுடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாட்டை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளுடன் எதிர்பார்ப்புகளைக் கடந்து பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது.

கறுவா, கராம்பு, சாதிக்காய் போன்ற விவசாய ஏற்றுமதிகளுக்கு பெறுமதி சேர்த்து அதிக வருமானத்தை ஈட்ட முடியும். கொவிட் 19 பரவலுடன் உலக பொருளாதாரத்தில் புதிய சந்தையொன்று உருவாகியுள்ளது. மத்திய கிழக்கு, சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட ஆசிய பிராந்தியத்தில் பெரிய சந்தையொன்று உருவாகி வருகிறது.

முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தலில் விரிவான அறிவுள்ள எமது ஏற்றுமதியாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. புதிய உத்வேகத்துடன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை விரைவாகப் பலப்படுத்தும் பொறுப்பும் ஏற்றுமதியாளர்களைச் சார்ந்ததாகும். இந்நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமான விவசாய பயிர்கள் மற்றும் அத்தியாவசியமல்லாத பொருள்களின் இறக்குமதியை நிறுத்தியதன் மூலம் அந்நியச் செலாவணி விகிதத்தைக் கட்டுப்படுத்தவும், விவசாயிகளைப் பாதுகாப்பதற்கும் அரசுக்கு முடியுமாக இருந்தது- என்றார். (ப)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் கே.கே.பி. இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குருதித் தேவையைக் கருத்தில் கொண்டு குருதிக்கொடை முகாம் அண்மையில் நடத்தப்பட்டது. புனித பத்திரிசியார் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள லொயலாஸ் மண்டபத்தில் முகாம் நடைபெற்றது. சுமார் 100 பேர் இதில் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ம-159)

# தனியார் கல்வி நிறுவனங்களில் இறுக்கமான சுகாதார விதிகள் !

யாழ்ப்பாணம், ஜூன் 13

**எதிர்வரும் 29ஆம் திகதி தொடக்கம் தனியார் கல்வி நிறுவனங்கள் மீளத் திறக்கப்படவுள்ள நிலையில், அவற்றுக்கான சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்களை, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டுள்ளார்.**



இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அவசர நிலைமையின் போது தொடர்பு கொள்ளக்கூடியவாறு சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களின் விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

அவசர நிலைமைகளின்போது கொவிட்19 மாதிரியான அறிகுறிகளுடன் காணப்படும் ஒருவரைத் தனிமைப்படுத்துவதற்கான தனியான அறை அல்லது பகுதி ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

வாசலிலேயே கை கழுவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

போதுமான அளவில் சுத்திகரிக்கும் திரவங்கள்; இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வகுப்புக்களும் ஆரம்பிக்கும் முன்னர் சகல மேசைகள், கதிரைகள் மற்றும் மேற்பரப்புக்கள் உரிய கிருமி நீக்கும் திரவங்கள் கொண்டு சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

நிலங்கள் அனைத்தும் உரிய வெளிற்றும் திராவகங்கள் கொண்டு சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

சகல மாணவர்களினதும் பெற்றோர்களினதும் பெயர், விலாசம் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் என்பன சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

மாணவர்களுக்கிடையே 1 மீற்றர் இடைவெளி எப்போதும் பேணப்படுவதுடன் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் முகக் கவசம் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

மாணவர்களுக்கிடையில் வருகையை உறுதிப்படுத்தும் பத்திரங்களை பகிர வேண்டாம். மாணவர்களின் வகுப்பறை அட்டைப் பாவனையும் தவிர்க்கப்படல் வேண்டும்.

அதிக மாணவர்கள் பங்குகொள்ளும் வகுப்புக்கள் மொத்த மாணவர் எண்ணிக்கையின் அரைவாசியானவர்களுடன் 1 மீற்றர் சமூக இடைவெளியினைப் பேணும் வகையில் நடத்தப்படுதல் வேண்டும்.

மாணவர்களுக்கு காய்ச்சல், இருமல், தொண்டை நோ போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் பெற்றோர்கள் அவர்களை தனியார் கல்வி நிலையத்துக்கு அனுப்புதல் கூடாது. அதே போல் ஆசிரியருக்கும் இந்நோய் அறிகுறிகள் காணப்படின் சமூகமளிக்கக்கூடாது.

வகுப்பு நடத்தப்படும் இடத்தில் போதுமான காற்றோட்ட வசதி இருப்பதை உறுதிப்படுத்தவும்.

வெவ்வேறு வகுப்புக்கள் நடத்தப்படுமாயின் அவற்றின் ஆரம்பிக்கும் நேரம், முடிவடையும் நேரம் என்பன வெவ்வேறாக இருப்பதனால் மாணவர்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்க முடியும்.

வகுப்பறையினுள் அச்சிடப்பட்ட பாடக் குறிப்புக்களை பரிமாறப்படுவதனைத் தவிர்க்கவும். இதற்காக பொதுவான ஓர் இடத்தில் இவற்றை வைத்து மாணவர்களை எடுப்பதற்கு அனுமதிக்கலாம்.

கொவிட் - 19 தொடர்பான அறிவுறுத்தல்கள் தனியார் வகுப்புக்கள் நடைபெறும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் விரும்பத்தக்கது.

சகல மாணவர்களும் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் தொடர்பாக தெளிவூட்டப்படுதல் அவசியமானதாகும் - என்றுள்ளது. (ஒ.5)



## கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் அனுசரணையுடன் மணியம்தோட்டம் சமூக மேம்பாட்டு சுயமுயற்சிக் குழு நடத்தும் சுயதொழில் கண்காட்சியும் விற்பனையும் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் யூசின் பிரான்சிஸ் அடிகளாரால் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் பகுதியில் அமைந்துள்ள இயூயின் கல்வி நிலையத்தில் இந்தக் கண்காட்சி இடம்பெறுகின்றது. (ம)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை-

**யாழ்ப்பாண மாவட்டத்தில்**

சாவகச்சேரி தபாலக வீதி, டச்சு வீதி கண்டுவில், அரசடி ஆசிரியர் வீதி, பெருங்குளம் சந்தி, 190 ஆவது மைல் கல் ஏ9 வீதி, நுணாவில் வைரவர் கோவில் பிரதேசம், கல்வயல் துர்க்கை அம்மன் கோவில் சந்தி, சாவகச்சேரி ரயில் நிலையம், சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி மருத்துவமனைப் பிரதேசம், சாவகச்சேரி நீதிமன்ற பிரதேசம், அரசடி, கச்சாய் வீதி, சங்கத்தானை, மீனாட்சியம்மன் கோவில், யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் வேம்படி சந்தியிலிருந்து கஸ்தூரியார் வீதி சந்தி வரை, மகாத்மா வீதி, முனீஸ்வரன் வீதி, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாண போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மூன்று மாடிக் கட்டடத்தொகுதி, கொமர்ஷல் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, சுகாதார சேவைகள் நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி ஆகிய இடங்களிலும்-

**வவுனியா மாவட்டத்தில்**

ஜோசப் முகாம், இராணுவ முகாம், விமானப் படை முகாம் ஆகிய இடங்களிலும்-

**மன்னார் மாவட்டத்தில்**

ஓலைத்தொடுவாய், முள்ளிப்பழம், தள்ளாடி, கடலோரி வீதி, சாந்திபுரம், தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## பிளாஸ்டிக், கண்ணாடிகளை வீடுகளிலிருந்து அகற்ற வாரத்தில் ஒருநாள் வாகனம்

மூதூர், ஜூன் 13

பிளாஸ்டிக் பொருள்களையும், கண்ணாடிப் பொருள்களையும் சேகரிப்பதற்கென வாரத்தில் ஒரு நாள் தனியான வாகனம் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று திருகோணமலை நகரசபைத் தலைவர் நா.ராஜநாயகம் தெரிவித்தார்.

திருகோணமலை நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் சேதன குப்பைகள், கண்ணாடிப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள் என்பனவற்றை ஒவ்வொருவரும் வீடுகளிலேயே தரம் பிரித்து நகர சபை சுகாதார ஊழியர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

சேதனக்குப்பைகள் வழமைபோல் வாரத்தில் இரண்டு தடவைகள் சேகரிக்கப்படும். திங்கட்கிழமைக்கு பின்னர் சேதனக்குப்பைகள் தனியாகவும் கண்ணாடி உடையல்கள் தனியாகவும் பிளாஸ்டிக் கழிவுகள் தனியாகவும் தரம் பிரிக்கப்பட்டு ஒப்படைக்கப்படாவிடின் அவற்றை நகராட்சிமன்ற ஊழியர்கள் பொறுப்பேற்கமாட்டார்கள்-என்று அவர் மேலும் தெரிவித்தார். (து)





## கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வவுனியாவில்

வவுனியா, ஜூன் 13

வவுனியா மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், மாகாண பணிப்பாளர் எஸ்.உதயகுமார், மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன, வலயக்கல்வி பணிப்பாளர்களான மு.இராதாகிருஷ்ணன், அன்னமலர் சுரேந்திரன் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மாவட்டத்தின் தற்போதைய கல்வி நிலை தொடர்பாகவும், அதன் வளர்ச்சிக்கு எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. (110)

## வவுனியாவில் இராணுவத்தினரால் நேற்று கண்காணிப்பு நடவடிக்கை



வவுனியா, ஜூன் 13

வவுனியாவில் இராணுவத்தினர் வழமைக்கு மாறாக நேற்று வீதிகளில் மோட்டார் சைக்கிள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குற்றச்செயல்கள், சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் அவர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது (ம-110)

# கொவிட் –19 நிதியத்துக்கு ஒரு நாள் சம்பளத்தைக் கோரியது வவு.தெற்கு கல்வித் திணைக்களம்

**வவுனியா, ஜூன் 13**

**ஒரு நாள் சம்பளத்தை கொவிட் – 19 நிதியத்துக்கு வழங்குமாறு வவுனியா தெற்கு வலய ஆசிரியர்களிடம் கோரப்பட்டுள்ளது.**

இம் மாதம் ஒவ்வொரு ஆசிரியர்களும் தமது அடிப்படைச் சம்பளத்தில் ஒரு நாள் சம்பளத்தை கொவிட் 19 நிதியத்துக்கு வழங்க சம்மதம் தெரிவித்தால் கையொப்பமிடுமாறு அவர்களது சம்பள பட்டியலுடன் வவுனியா தெற்கு வலயக் கல்வித் திணைக்களத்தால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தெரிவித்ததாவது:

கொவிட் 19 நிதியத்துக்கு ஒரு நாள் சம்பளத்தை வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. அதனை நாம் பாடசாலை அதிபர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். அதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள். தற்போது ஆசிரியர்களின் கையொப்பத்தைப் பெற்றுத் தருமாறு அதிபர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. அவர்கள் விரும்பினால் ஒரு நாள் சம்பளத்தை கொவிட் 19 நிதியத்துக்கு வழங்க முடியும் – என்றார்.

இதேவேளை, தாமும் கொவிட் 19 தாக்கத்தால் பாதிப்படைந்துள்ளனர் எனவும் இம் மாதத்தில் இருந்து தாம் பெற்றுக்கொண்ட கடன்களை வங்கிகள் மீண்டும் அறவிடவுள்ளமையால் இவ்வாறு பணம் வழங்குவது தமக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் ஆசிரியர்கள் பலரும் தெரிவித்துள்ளனர். (ஐ)

## கிளிநொச்சியில் மண் குழைக்கும் இயந்திரம் கையளிப்பு



கிளிநொச்சி, ஜூன் 13

கிளிநொச்சி மாவட்ட மட்பாண்டக் கைப்பணி அபிவிருத்திச் சங்கத்தினரிடம் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான மண் குழைக்கும் இயந்திரம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் தேசிய அருங்கலைகள் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் இந்த இயந்திரம் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அண்மையில் நேரடியாகச் சென்று இயந்திரத்தை கையளித்திருந்தார்.

இந்த இயந்திரத்தின் மூலம் மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களான 14 மட்பாண்ட உற்பத்தியாளர்கள் நவீன முறையில் தமது உற்பத்திகளை அதிகரித்துப் பயனடைய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

'கடந்த காலங்களில் கையால் மண்ணைப் பதப்படுத்தும்போது அதிகமான உழைப்பும் நேரமும் வீண் விரயமானதாகவும் இவ் இயந்திரம் தமக்குக் கிடைத்தமையானது மிகவும் பயனுடையதாக அமையும்' என்றும் பயனாளிகள் தெரிவித்தனர். இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர், உதவி மாவட்டச் செயலர், இடர் முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பாளர், தேசிய அருங்கலைகள் பேரவையின் கைப்பணி விரிவாக்கல் உதவியாளர் மற்றும் தொழிற்றுறைத் திணைக்கள கிளிநொச்சி மாவட்ட அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-222)

## வவுனியாவில் வயலில் அமைந்த மற்றொரு கட்டடமும் அகற்றல்

வவுனியா, ஜூன் 13

வவுனியா பண்டாரிக்குளத்தில் நெற் காணியில் அனுமதியின்றிக் கட்டப்பட்ட வாகனம் திருத்தும் நிலையக் கட்டடத்தை உடனடியாக அகற்றுமாறு வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் அறிவித்தல் அனுப்பியுள்ளார்.

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் எழுத்திலான அனுமதியின்றி நெற்காணிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள நெற்காணியில் கட்டுமானத்தை மேற்கொள்வது குற்றச் செயலாகும். இதன் பிரகாரமே அந்தக் கட்டடத்தை அகற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. கட்டடத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பதாக அகற்றுமாறு வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அந்தத் திகதியினுள் கட்டடம் அகற்றாவிடின் நீதிமன்றத்தின் உத்தரவுடன் அகற்றுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளரால் பிறப்பித்துள்ள உத்தரவு அறிவுறுத்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னரும் வேறொரு வர்த்தக நிலையக் கட்டடத்துக்கும் இவ்வாறான அறிவித்தல் கமநல அபிவிருத்தி ஆணையாளரால் பிறப்பிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-18)

## தொழில்நுட்பக்கூடம் திறந்துவைப்பு

மன்னார், ஜூன் 13

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்கூடம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் ஜீ.குணசீலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மடு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன், வட மாகாண கல்வி அமைச்சின் செயலர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ம-56)

## வாடகை, குத்தகைகள் இரு மாதங்கள் நிறுத்தம்

### சாவ. நகர சபை தீர்மானம்

சாவகச்சேரி, ஜூன் 13

சாவகச்சேரி நகரசபையின் கட்டடங்களுக்கான வாடகை, சந்தைக் குத்தகை மற்றும் முச்சக்கரவண்டி, தனியார் போக்குவரத்து சேவை ஆகியவற்றுக்கான அறவீடுகளை கொவிட் 19 காலப் பகுதிக்கு நிறுத்தவேண்டும் என்று சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வில் தீர்மானிக்கப்பட்டது.

சபையின் கட்டடங்களுக்கு மாதாந்தக் கட்டணம் அறவிடுவது தொடர்பாக ஆராயப்பட்டபோது கட்டடங்களுக்கு சந்தைக் குத்தகைக்கு சந்தை மூடப்பட்ட நாள்களுக்கும் கழிவு வழங்க சட்டத்தில் இடமுண்டு எனச் செயலர் தெரிவித்திருந்தார். தற்போது ஏனைய சபைகளிலும் வாடகை மற்றும் குத்தகை போன்றவற்றை இரு மாதங்களுக்கு அறவிடுவதில்லையென தீர்மானிக்கப்பட்டுள்ளதால், சாவகச்சேரி நகரசபையும் இரு மாதங்களுக்கு அவற்றை அறவிடுவதில்லை என தீர்மானித்துள்ளது.

முச்சக்கரவண்டி மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளுக்கும் அறவிடப்பட்ட குத்தகையை இரு மாதங்கள் நிறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (பு-9)




# அந்நியரை கலங்கடித்த சங்கிலியன்



N.P.ஸ்ரீந்திரன்,
(செயலாளர்,
தமிழ் மன்னன் சங்கிலியன்
நினைவுதினக்குழு.)

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடியில் வந்துதித்த வீரமறவனே சங்கிலிமன்னன். யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன். 7ஆம் செகராஜசேகரன் என்ற சிறப்புப் பெயரையுடையவன்.

கி.பி.1519ஆம் ஆண்டு முதல் கி.பி. 1561ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டவன். ஆறாம் பரராஜசேகரனுக்கும் மங்காத்தாளுக்கும் மகனாகப் பிறந்தவன்.

ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தில் வந்துதித்தவன். சிறந்த சைவத் தமிழ் மன்னனாகத் திகழ்ந்தவன். நெற்றியில் நீறும், நிமிர்ந்த உரம்மிக்க நெஞ்சும் கையினில் வீரவாளும் கண்களில் ஒளியும் கொண்ட கம்பீரத்தோற்றத்தைக் கொண்டவன். நல்லாட்சிநாதனாக விளங்கியவன். வலிமைமிகு காலாட்படையினையும் கடற்படையினையும் வைத்திருந்தவன். கடல் கடந்த வணிகத்தின் மூலம் பெருமளவு வருமானம் பெற்றிருந்தவன். போர்த்துக்கேயரின் வணிக முயற்சிகள் நாட்டு நலனுக்கு பாதகமானது என்பதை அறிந்திருந்தவன். இதன் காரணமாக 1540களில் போர்த்துக்கேயர்களின் வணிகக் கப்பல்கள் யாழ்ப்பாணத் துறைமுகத்துக்கு வந்தவேளை படைகளையனுப்பிக் கப்பல்களையும் பொருள்களையும் பறிமுதல் செய்து பறங்கிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தான் சங்கிலியன். பறங்கிகளுக்கு எதிராகப் பலம் மிக்க ஆட்சியொன்றை சங்கிலியன் நிறுவியி ருந்தான். இதன் காரணமாக போர்த்துக்கேயர்களின் வணிகத்துக்கும் மதமாற்ற நடவடிக்கைகளுக்கும் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தான். பிரான்சிஸ் சவேரியர் பாதிரியாரும் குறோஸ் பாதிரியாரும் மேற்கொண்டிருந்த மதமாற்ற நடவடிக்கைகளுக்கு படைகொண்டு சங்கிலியன் பதிலடி கொடுத்தான்.




இதனால் சங்கிலிய மன்னனுக்கு இந்த இரு மதகுருமாரும் கடும் பகையாளிகளாயிருந்தனர். யாழ்ப்பாண வரலாற்றைக் குறித்து வைத்த குறித்த இரு மதகுருமாரும் சங்கிலியனின் வீரப்பிரதாபங்களை மறைத்து , வரலாற்றைத் திரிபுபடுத்தி எழுதியுள்ளனர் என்பது வரலாற்றாசிரியர் கருத்தாகும்.

கி.பி. 1544 இல் பாதிரிமார் இருவர்களதும் தூண்டுதலின் பெயரில் மன்னாரில் வாழ்ந்த சைவ மக்கள் பலர் கத்தோலிக்கர்களாக மதம் மாற்றப்பட்டிருந்தனர். இதையறிந்த சங்கிலிய மன்னன் படையனுப்பி மதம் மாறிய யாவரையும் தண்டித்தான். இதுமுதல் யாழ்ப்பாணத்தரசு போர்த்துக்கேயருக்கு எதிராக எழுச்சி பெற்றிருந்தது. இந்த எழுச்சிக்குத் துணையாக சிங்கள மன்னன் மாயாதுன்னை சங்கிலி மன்னனுடன் கைசோர்த்து நின்றான். போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்தில் நிலைகொள்ள விடாது தடுப்பதில் கடும் பிரயத்தனங்களை எடுத்திருந்தான். 1545ஆம் ஆண்டு சீதாவக்கை, கண்டி இராச்சியங்களுடனும் சங்கிலியன் தொடர்பைப் பேணியிருந்தான். அங்கும் போர்த்துக்கேயர்களுக்கு எதிராகப் படையனுப்பி உதவிகள் புரிந்திருந்தான்.

தமிழ் மன்னன் சங்கிலியன் ஓர் மாவீரன் என்பதை நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலயத்தின் அருகின் வயல்வெளியில் போர்த்துக்கேயப்படைகளுடன் நடந்த 10நாள் வாள் போர் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. இந்தப் பத்துநாள் போரிலும் 1700க்கும் மேற்பட்ட பறங்கிப் படைகளின் தலைகள் சங்கிலியனின் வாளுக்கு இரையாகியிருந்தன. இதைக் கண்ட பறங்கிப் படைகள் கதிகலங்கிப் பின்வாங்கி நின்றன. உயிரைக் காக்க ஒரேவழி சரண் புகுவதேயென எண்ணி நின்றன. 11ஆம் நாள் சங்கிலிய மன்னன் 400 பேரைக்கொண்ட படைவீரர்களு டன் மேலும் முன்னோக்கிச் சென்றிருந்தான். அவ்வேளை தரங்கமாபாடியிலிருந்து துணைப்படைகள் பறங்கிப் படைகளுக்கு உதவிக்கு வர அவர்கள் உற்சாகமடைந்து போராடத் தயாரானர்கள்.

பின்னர் நயவஞ்சகமான தந்திரத்தின் மூலம் சங்கிலியனைப் போர்த்துகேயர் சிறைபிடித்தனர். அதனையடுத்து இந்தியாவின் கோவா மாநிலத்துக்கு கொண்டுசெல்லப்பட்ட சங்கிலியன், அங்கு தூக்கிலிடப்பட்டான். மறைந்தான் மாவீரன், வீழ்ந்தது யாழ்ப்பாண இராச்சியம். எம் மண்ணை அந்நியர்கள் ஆண்டனர் பலநூறு வருடங்கள் .

வீரபாண்டிய கட்டப்பொம்மனுக்கு நிகராகச் செயற்பட்டு தமிழையும் சைவத்தையும் கட்டிக் காத்த சங்கிலிய மன்னன் புகழ்பாடுவோம். பரணி பாடுவோம். அவரது வரலாற்றை எமது சந்ததிக்கு எடுத்துச் சொல்வோம். இப்பணியில் அரசியல்வாதிகளும் கல்விமான்களும் கலங்கரை விளக்காக வேண்டும்.

சங்கிலி மன்னன் இறந்ததாகக் கருதப்படும் வைகாசித் திங்களில் வரும் அட்டமி பூரட்டாதி திதியில் சிரார்த்த கிரியை நாட்டின் பல பாகங்களிலும் அனுஷ்டிப்போம். ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள வேண்டும். அடுத்த சந்ததியினரை அதற்கு நாம் தயார்படுத்த வேண்டும். அனைவரும் இணைவோம். அருந்தமிழ் வீரம் வளர்ப்போம்.

**கி.பி.1519ஆம் ஆண்டு முதல் கி.பி. 1561ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டவன். ஆறாம் பரராஜசேகரனுக்கும் மங்காத்தாளுக்கும் மகனாகப் பிறந்தவன் சங்கிலிய மன்னன்.**

“ தமிழ் மன்னன் சங்கிலியன் ஓர் மாவீரன் என்பதை நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலயத்தின் அருகின் வயல்வெளியில் போர்த்துக்கேயப்படைகளுடன் நடந்த 10நாள் வாள் போர் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. இந்தப் பத்துநாள் போரிலும் 1700க்கும் மேற்பட்ட பறங்கிப் படைகளின் தலைகள் சங்கிலியனின் வாளுக்கு இரையாகியிருந்தன. ”



## துயர் பகிர்வு


கடந்த (11.06.2020) இறைபதம் அடைந்த
குமரன்குளம் துன்னாலை தெற்கு கரவெட்டியை
பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்
**ஏரம்பு கணபதிப்பிள்ளை**

அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஜெ.குணசீலன்-கோமதி,**
**அபிசா,அகானா**

## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 11 . 1948 — மறைவு 12 . 06 . 2020

**வீரகத்தி சேந்தன்**
**(பொறியியலாளர்)**

பெரிய தோட்டம் கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சேந்தன் (பொறியியலாளர்) நேற்று (12.06.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் க.வீரகத்தி, நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், எழிலரசியின் அன்புக் கணவரும், மாதவன், கல்பனா, ராஜாராம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தா, வசந்தன், வசந்தா, அஜந்தா (வாணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அபிராமியின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரிய தோட்டம் கரவெட்டி மத்தி, கரவெட்டி
003164716375 (மாதவன்)
0779226790 (மனோகரன்)
0772061425 (தேவிகா)

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 07.03.1959 — மறைவு 12.06.2020

**கந்தையா சிவநேசன்**
**(ஆசாரி)**

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மன்னார் முருங்கனில் வசித்து தற்காலிகமாக திருநெல்வேலியில் வசித்து வந்தவருமான கந்தையா சிவநேசன் நேற்று (12.06.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சற்குணம், மனோன்மணி, சுந்தரலிங்கம் மற்றும் விஸ்வலிங்கம், கிருஷ்ணபிள்ளை, மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலராணி, கங்காதேவி ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிரதீஸ் மற்றும் பிரதீப், பிரசாத், பிரசாந், பிரியா, டயானி, டக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்செல்வி (அருள்), கருணாகரன் (கரன்), சுதர்சன் (சுதன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிசானி, மேதன், ஈழவன், அஞ்சய் ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**பத்திரகாளி கோவிலடி,**
**திருநெல்வேலி.**

தகவல் :
**குடும்பத்தினர்.**
**077 9151 402, 077 699 7072**

# வாகனங்களைப் பறிமுதல் செய்ய லீசிங் நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 13
லீசிங் வசதிகளின் கீழ் வாகனங்களை கொள்வனவு செய்து கடன் தவணைகளை செலுத்தத் தவறும் நபர்களின் வாகனங்களை பறிமுதல் செய்வதற்கு லீசிங் நிறுவனங்கள் பின்பற்றும் முறைமை சட்ட விரோதமானது என்பதால் ஒருபோதும் அதற்கு இடமளிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.
லீசிங் நிறுவனங்கள் அவ்வாறு வாகனங்களை பறிமுதல் செய்வதற்கு முன்னர் பொலிஸாருக்கு தெரியப்படுத்துவதில்லை. அவர்கள் பொலிஸில் முறையிடுவது வாகனத்தை பறிமுதல் செய்த தன் பின்னரேயாகும். பலவந்தமாக மேற்கொள்ளப்படும் இத்தகைய பறிமுதல்கள் சிலபோது பாரதூரமான வன்முறைக்கு காரணமாகின்றது. பறிமுதல் செய்ததன் பின்னர் கிடைக்கும் முறைப்பாடு களை மறுஅறிவித்தல் வரை பொறுப்பேற்க வேண்டாம் என ஜனாதிபதி பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
கொவிட் 19 பரவலுடன் பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு குழுவினருக்கு அரசு வழங்கிய நிவாரணங்களின் கீழ் முச்சக்கர வண்டி உரிமையாளர்களினால் செலுத்தப்படும் லீசிங் கடன் தவணையை அறவிடுவதை 6 மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டது. ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட 16/2020 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் இரண்டாவது பிரிவில் அது பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில் கடன் தவணை செலுத்தாததன் அடிப்படையில் வாகனங்களை பறிமுதல் செய்வது அரசாங்கத்தின் உத்தரவை மீறும் செயலாகும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.
கடன் தவணை செலுத்தாததன் காரணமாக வாகனங்களை பறிமுதல் செய்வதற்கு இடமளிக்க வேண்டாம் என்றும் ஜனாதிபதி பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஏ)

## நாவாந்துறையில் நாளை முற்பகல் குருதிக்கொடை




யாழ்ப்பாணம் நாவாந்துறை புனித பரலோக அண்ணை ஆயலத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை குருதிக்கொடை முகாம் நடைபெறவுள்ளது. முற்பகல் 9.30 தொடக்கம் இது நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் குருதிக்கொடை வழங்குமாறு சென்.மேரிஸ் இளைஞர் கழகம் கேட்டுள்ளது. (த)

வல்லை...
ணுத்தைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்துப் பொலிஸார் விசாரணைகளுக்காக அந்த முகாமுக்குச்சென்றிருந்தனர்.
இராணுவ முகாமில் இருந்த இராணுவத்தினர், முகாமில் எந்த வெடிப்புச் சம்பவமும் நடக்கவில்லை என்று பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர். முகாமுக்குள் நடந்த பிறிதொரு சம்பவத்திலேயே இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர். பொலிஸார் சிறிது நேரம் அங்கு நின்று விசாரணை மேற்கொண்ட பின்னர் திரும்பிச் சென்றனர்.
அதேவேளை, அந்தப் பகுதியில் வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது என்று அந்தப் பகுதியால் சென்றவர்கள் கூறுகின்றனர். (எ-26)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 0214931111

## கண்ணீர் அஞ்சலி



வேலணை பிரதேச செயலகத்தில் பொருளாதார
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
க.ரேகாலினி யின் அன்புத் தந்தை
**சின்னையா மகாலிங்கம்**
அவர்களின் மறைவுக்கு எமது விழிநீர்
அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்**
**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம், வேலணை.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 . 10 . 1932 — மறைவு 26 . 05 . 2019

திருமதி **செல்லம்மா நடராஜா**

திதி:- வைகாசி அபரபட்ச அட்டமி

ஆண்டொன்று கழிந்தது அம்மா - இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம்.

89/A, காரைக்கட்டு வீதி,
வண்வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 |  | 11 |
| 01 | | 06 |
| 1931 | | 2020 |

திருமதி

## புவனேஸ்வரி (பூம்பதம்) இரத்தினசிங்கம் (S.R)

பங்களா வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், W.A.சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி-இரத்தினசிங்கம் கடந்த (11.06.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-கண்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லாச்சி தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் (சுன்னாகம்) இரத்தின சிங்கத்தின் (S.R) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற புஸ்பநாதன் மற்றும் வாசுகி (ஓய்வுபெற்ற இலிகிதர், தேசிய வீடமைப்பு திணைக்களம்-கொழும்பு), வதனி (அனுராதபுரம்), யோகநாதன் (நோர்வே), செந்தில்நாதன் (சுவிஸ்), வனஜா (கனடா), வரதா (அவுஸ்திரேலியா), வசிகலா (சுவிஸ்), ஜெகநாதன் (சுவிஸ்), இராஜகருணைநாதன் (சுவிஸ்), வாணிலேகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பங்களா வீதி, மல்லாகத்தில் உள்ள அன்னாரின் இலல்லத்தில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பங்களா வீதி, மல்லாகத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.30 மணியளவில் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பங்களா வீதி,
மல்லாகம்.

தகவல் :
குடும்பத்தினர்.

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி பராசக்தி இராஜரட்ணம்

அன்னை மடியில் 02.02.1916
ஆண்டவன் அடியில் 13.05.2011

திதி: ஏகாதசி

திரும்பிப் பார்க்கின்றோம்
காலங்கள் கரைந்து ஆண்டுகள்
கடந்தன ஒன்பது நாம் மறந்தாலன்றோ
உங்களை நினைப்பதற்கு
என்றென்றும் உங்கள் நினைவாய்
வாழ்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"இராஜசக்தி"
வண் - வடமேற்கு,
ஆனைக்கோட்டை.

என்றும் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## முருகேசபிள்ளை பேரம்பலம்

**இலங்கையில் சுகாதார சேவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகவும் (Clerk), கணக்காளராகவும்(Accountant)**

யாழ். வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வாழ்விடமாகவும், Nigeria Kaduna State ஐ வதிவிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசபிள்ளை பேரம்பலம் 11.06.2020 வியாழக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான பேரம்பலம் மாணிக்கம் தம்பதிய்ரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை கனகம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை (தங்கச்சியம்மா) அவர் களின் அன்புக் கணவரும், மலர்விழி, அருள்மொழி, திருமொழி, வேல்விழி, இறைமொழி (Electron Auto– Montreal), நிறைமொழி (Montreal), கயல்விழி (பபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, அன்னம்மா, பூலோகம் (விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி), சிவபாக்கியம், பொன்னுச்சாமி (துரைச்சாமி, PT மாஸ்ரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மகாதேவா, சுலோச்சனா, சசிரேகா, இரத்தினேஸ்வரன், சிவதர்ஷினி, பவானி, புவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், 'கந்தசாமி, மங்கயற்கரசி, முருகேசு மற்றும் தனலட்சுமி, கால்ஞ்சென்றவர்களான சபாரட்ணம் - இராசம்மா, பொன்னுத்துரை - இரத்தினம், கணபதிப்பிள்ளை - பத்மாவதி, சிவசுப்ரமணியம் - சுந்தரவல்லி (ஒளி, ஒலி அமைப்பாளர்), தம்பிஜயா (ஒளி, ஒலி அமைப்பாளர்) மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சதீஸ்காந்- ஜனனி, லாவண்ணியா, கார்த்திகா-வாகீசன், ஆதவன், ஆரணி, ஆதவி, அனுராம், மயூரன், வாசுகி, தினேஷ், நரேன், கபிலன், பவித்திரன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பேரனும், நேசிகா, ஆழினி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 -3.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகள் பி.ப 3.30 மணியளவில் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**மகாதேவா கந்தசாமி (தேவர்)**
**புளியங்கூடல், இலங்கை.**
**076 309 3846**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## மீன்வளத்துறையின் பயன்பாட்டிற்காக வாடகைக்கு வீடு / கட்டடம் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மீன்வளத் துறையின் பயன்பாட்டிற்காக சகல வசதிகளுடனும் கூடியவீடு /கட்டடம் பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் (500 மீற்றருக்குள்) வாடகைக்கு தேவை.

| இல. | விவரம் | வேண்டப்படும் தகைமைகள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | அறைகள் | எல்லா அறைகளும் குளிரூட்டப் பட்டதாக இருத்தல் விரும்பத் தக்கது (10'x 12') | குறைந்தது 05 |
| 02. | ஹோல் (Hall) | குறைந்தது 400 சதுர அடிகள் | 01 |
| 03. | வீடு/கட்டடத்தின் பரப்பளவு | குறைந்தது 1250 சதுர அடிகள் | - |
| 04. | தளஅமைப்பு | முழுமையாகமாபிள் பதிக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் | - |
| 05. | வாகன தரிப்பிட வசதி | குறைந்தது 10 மோட்டார் சைக்கிள்கள் விடக்கூடியதாக இருத்தல் வேண்டும் | - |
| 06. | குளியல் அறைகள் | இணைந்தகுளியல் அறைகள் | குறைந்தது 02 |
| | | பொதுவானகுளியல் அறைகள் | குறைந்தது 01 |

வீட்டை/கட்டடத்தை வாடகைக்கு தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரிப்படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 26.06.2020 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் பிரதிப் பதிவாளர் / பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடதுமேல் மூலையில் **"மீன்வளத்துறையின் பயன்பாட்டிற்கான வீடு / கட்டடம்"** என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

- தொடர்புகளுக்கானதொலைபேசி இல: 021 222 6517

பதிவாளர்.

—
……………………………
……………………………
……………………………

பிரதிப் பதிவாளர்/பொதுநிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

### யாழ். பல்கலைக்கழக மீன்வளத்துறையின் பயன்பாட்டிற்கான வீடு / கட்டடம்

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் …………… ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை / கட்டடத்தை பல்கலைக் கழகத்திற்கு வாடகைக்குத்தர விரும்புகின்றேன்.

**வீடு/கட்டடம் பற்றிய விவரங்கள்**

1) வீடு/கட்டடம் அமைந்திருக்கும் இடம்
……………………………………………………………
……………………………………………………………

2) வீட்டு/கட்டடசொந்தக்காரரின் பெயரும் அவரதுநிரந்தரமுகவரியும்
……………………………………………………………
……………………………………………………………

3) தொடர்புகொள்ளவேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்

பெயர்:……………………………………………………

முகவரி: ……………………………………………………
……………………………………………………………

தொலைபேசி இல: ……………………………………………

4) வீட்டின்/கட்டடத்தின் பரப்பளவு

| எதிர்பார்க்கும் பரப்பளவு (சதுரஅடி) | வீடு/கட்டடத்தின்பரப்பளவு (சதுர அடி) |
|---|---|
| 1250 | |

5) வீடுஅமைந்துள்ளகாணியின் பரப்பளவு: ……………………………………
6) வீட்டின்/கட்டடத்தின் ஹோல்கள் (Hall)
   a) எண்ணிக்கை ………………
   b) பரப்பளவு (சதுர அடி) ………………..
7) அறைகளின் எண்ணிக்கை

| விவரம் | AC உடன் | AC அற்றது |
|---|---|---|
| இணைந்த குளியல் அறைகளுடன் அறைகளின் எண்ணிக்கை | | |
| இணைந்த குளியல் அறைகள் அற்ற அறைகளின் எண்ணிக்கை | | |

8) மின்சார வசதி உண்டு / இல்லை……………………… ……………………
   விவரம் ……………………………………………… ……………………
9) தண்ணீர் வசதி: கிணறு / குழாய் நீர்
   விவரம் ……………………………………………… ……………………
10) எதிர்பார்க்கும் குத்தகை / மாதாந்த வாடகை … ………………………
11) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு…………… ……………………
12) வேறுயாதாயினும் கட்டுப்பாடுகள்/நிபந்தனைகள் (இருப்பின்) …………… …
    ……………………………………………………………… …
13) வீடு/கட்டடம் அமைந்துள்ள காணியின்
    a) உறுதியின் நிழற்பிரதி
    b) நில அளவைப் படத்தின் நிழற் பிரதி
    எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகைத் தொகையானது அரச மதிப்பீட்டுத் திணைக் களத்தினால் மதிப்பிடப்பட்ட வாடகைத் தொகையுடன் முரண்படாதவாறு ஒரு முடிவுக்கு வருவதற்கு இணங்குகின்றேன்.

திகதி………………………… ……………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்

ES Printers




# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கி யிருந்து வேலை செய்ய பெண் உதவியாளர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 187 1821

**கணிதம், வரலாறு 06-O/L,A/L**

தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அடிப்படை யிலிருந்து கற்பிக்கப்படும். தேசிய, மாவட்ட ரீதியில் சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் ஆசிரியர்.

T.P: 077 9682097

## தவறவிடப்பட்டுள்ளது

புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்ப்பாணத் துக்கு இடையில் கிருஸ்ணன் இரத்தின சிங்கம் (194221703277) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவ ணங்கள் அடங்கிய பேர்ஸ் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். **077 157 6382**

## மணிவிழா வாழ்த்துக்கள்




யாழ் வலயத்தின் அழகியல் பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி ஓய்வுபெறுகின்ற மணிவிழா காணும் எங்கள்

**குடும்பத்தின் நாயகி**
**கலாவித்தகர் திருமதி**
**கமலராணி**
**ஜெயபாலசிங்கம்**
**(Dip. in Music, Dip. in Education)**

அவர்களை பாராட்டுவதோடு அவரது ஓய்வூதிய வாழ்வானது மிகவும் மகிழ்ச்சிகரமாகவும், மனநிறைவாகவும் என்றும் அமைவதற்கு எமது வாழ்த்துக்கள்"

Congratulations

**வாழ்த்துவோர்:-**
**குடும்பத்தினர்**



## நயினாதீவு
## ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் 2020

### முக்கிய அறிவித்தல்

மேற்படி ஆலய 2020ஆம் வருட உயர் திருவிழா 20.06.2020 ஆம் திகதி பகல் 12.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, 05.07.2020ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவு பெற அம்பிகை அருள் கிட்டியுள்ளது. நாட்டிலும் உலகம் முழுவதும் தற்போது தலை தூக்கியுள்ள கொடிய கொரோனா தொற்று நோய் காரணமாக அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையை அடியார்கள் அறிவர்.

இச் சூழ்நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட அடியார்கள் மாத்திரம் உற்சவத்தில் கலந்துகொள்ள அதிகாரிகள் அனுமதித்துள்ளதுடன் கீழ்க்காணும் சுகாதாரக் கட்டுப்பாடுகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

01. அடியார்கள் ஆலய வளாகத்தினுள் பிரவேசித்ததும் நன்றாக சவர்க்காரமிட்டுக் கைகளை கழுவுதல் வேண்டும்.
02. கண்டிப்பாக முகக் கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.
03. சமூக இடைவெளி 01 மீற்றர் கண்டிப்பாக பின்பற்றல் வேண்டும்.
04. ஆலய வளாகத்தினுள் நீண்ட நேரம் தரித்திருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.
05. ஆலய வீதிகளில் தற்காலிக கடைகள் நடத்துவதற்கு சுகாதாரப் பிரிவினால் அனுமதி வழங்கப்படவில்லை.

இக்கட்டுப்பாடுகள் காரணமாக நயினாதீவிற்கு வெளியில் வதியும் அடியார்க்ள உற்சவங்களில் கலந்து கொள்ள வாய்ப்பில்லாத காரணத்தால் தமது பிரார்த்தனைகளைத் தம் இல்லத்திலிருந்து அனுட்டித்து உலக மக்கள் யாவரும் இக் கொடிய நோயிலிருந்து விடுபட அம்பாளை வேண்டி மனச் சாந்தி அடையுமாறு வேண்டுகின்றோம்.

**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்.**

## தேர்தல்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் உள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் 7 வேட்பாளர்களும், புளொட் அமைப்பின் 2 வேட்பாளர்களும், ரெலோ அமைப்பின் ஒரு வேட்பாளருமாக 10 வேட்பாளர்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாகப் பல விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டன என்றும், தேர்தல் பரப்புரை வியூகங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்றும் தெரியவருகின்றது.

எதிர்காலத்தில் தமிழர் பிரச்சினைகள் தொடர்பில் பேரம் பேசுவதற்கு அதிக எண்ணிக்கையான உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்ல வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் அதை எவ்வாறு சாத்தியமாக்கிக் கொள்வது என்பது தொடர்பில் நேற்றுத் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று நிலமை உள்ளதால் பரப்புரைச் செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள், சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய சந்திப்புக்களை மேற்கொள்ள வேண்டியமை என்பவை தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம், கட்சிகளின் மூத்த செயற்பாட்டாளர்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (எ-105)

## தபால்...

பட்டுள்ளதாவது;

2020 நாடாளுமன்றத் தேர்தலுக்கான அஞ்சல் வாக்குக்கான திகதிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை. தேர்தலுக்குரிய பணிகள் மேற்கொள்ளப்படும் நாள்களைக் குறிப்பதற்கான எந்தவொரு தேர்தல் ஆணைக்குழுப் பத்திரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

அவ்வாறான ஆவணத்தைத் தயாரிக்கவில்லை என்று விடயப் பொறுப்பு அலுவலர்களும், தேர்தல்கள் ஆணையாளர் நாயகமும் எனக்கு அறிவித்துள்ளனர். எனது அல்லது உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரின் ஊடக அறிவித்தல் ஒன்றின் மூலம் உறுதி செய்யப்படும்வரை இவ்வாறான நாள் குறித்தல்கள் பற்றிய தகவல்களை வெளியிடாதிருக்க வேண்டும் என்று அனைத்து ஊடகங்களிடமும் தேர்தல்கள் ஆணைக்குழு விநயமாகக் கேட்டுக் கொள்கின்றது. என்றுள்ளது. (எ)

## ஆட்டம்...

ளார். இதற்கான காரணத்தை தெளிவுபடுத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கும் அவர் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

தனது அடுத்தக்கட்ட நகர்வுகள் குறித்து விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவே பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து முதலாவதாக வெளியேறினார். எனினும், தனது ஆதரவு யாருக்கு என்பதை அவர் வெளிப்படையாக அறிவிக்கவில்லை.

அதன்பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட வேட்பாளர் ஒருவர், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு ஆதரவளிக்கும் வகையில் தேர்தல் சமரில் இருந்து ஒதுங்கினார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நிலுகா ஏக்கநாயக்கவும் ஒதுங்கியுள்ளார்.

அதேவேளை, நாலவப்பிட்டிய தொகுதியிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் சிலர் மொட்டு கட்சியுடன் இன்று இணைந்துள்ளனர். (ஒ,5,44)

## தேர்தல் காலத்தில்...

ளர்களாக கோட்டக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் அறிவித்த பின்பு வழங்கப்பட்ட நியமனம் மற்றும் பதவி உயர்வுகளுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அவ்வாறு அனுமதி பெறப்படாத பதவி உயர்வுகளை தேர்தல் முடிவடையும் வரையில் இடை நிறுத்துமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

அதையடுத்து, இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் தற்காலிகமாக வலயத்துடன் இணைப்புச் செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஒ,5,105)

## தேர்தல்...

பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு, எண்ணப்பட்டு அன்று நள்ளிரவுக்குள் முதல் முடிவு அறிவிக்கப்படும். ஆனால் இம்முறை வாக்களிப்பு தினத்தன்று வாக்கெண்ணும் பணி இடம்பெறாது எனவும், மறுநாள் காலை ஆரம்பிக்கப்பட்டு அன்று நள்ளிரவுக்குள் முடிவுகளை வழங்கக்கூடியதாக இருக்கும் எனவும் ஆணைக்குழுவின் தவிசாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது;

ஓகஸ்ட் 5ஆம் திகதி வாக்களிப்பு முடிவடைந்ததும், வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துவரப்படும் வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பாக வைக்கப்படும். நிலையத்துக்கு பொறுப்பான அதிகாரியால் 'சீல்' வைக்கப்படும். அதிகாரிகளின் கையொப்பங்கள் அடங்கிய ஆவணமும் வாக்குப் பெட்டியில் ஒட்டப்படும். அதன் பின்னர் வாக்குபெட்டி படமெடுக்கப்படும். மறுநாள் காலை வாக்கெண்ணும் நிலையங்களுக்கு சென்று வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பாக இருந்தன என்பது உரிய வகையில் உறுதிப்படுத்தப்படும். அதேவேளை, விருப்பு வாக்குகளை எண்ணும் பணியை 7, 8ஆம் திகதிகளில் முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்என்றார். (ம-44)

## நாவாந்துறையில்...

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான ஒத்திகை நாவந்துறையிலும், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கான ஒத்திகை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும் நடத்தப்படவுள்ளன.

நாவாந்துறை றோமன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. அந்தப் பாடசாலையை வாக்களிப்பு நிலையமாகக் கொண்ட வாக்காளர்கள் 400 பேருக்கு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலைப் போன்றே முழுமையான ஏற்பாடுகளுடன் இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலைப் பார்வையிடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரட்நாயக்கா, மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிந்தக உள்ளிட்டோர் வருகை தரவுள்ளனர்.

வன்னித் தேர்தல் தொகுதிக்கான பரீட்சார்த்த தேர்தல் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஒட்டுசுட்டான் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை வாக்களிப்பு நடைபெறவுள்ளது. (ஒ,5)

## கிளாலியில்...

இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழ் கிளாலியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

அன்ரன் ஜெயரத்தினம் ஜெயபாலன் (வயது-40), அவரது மனைவியான. ஜெயபாலன் ரேணுகாதேவி (வயது-39), உறவினரான இராமச்சந்திரன் பிரசாத் (வயது-42) ஆகியோரே காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

## பஸ்கள்...

தெரியாதவர்கள் கல் வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் தனியார் பஸ் ஒன்றின் முன்பக்கக் கண்ணாடி சேதமடைந்துள்ளது. மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பணியாளர்கள் பயணித்த பஸ்ஸும் தாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாகப் பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6)

## வலி. வடக்கு...

உறவினர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் அந்தப் பகுதி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இடப்பெயர்வின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வலி.வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுச் சங்கத்தால் வழமைபோன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பூசை வழிபாடு நடத்தப்படவுள்ளது. கொரோனா சூழல் காரணமாக நிர்வாகத்தினர் 6 பேர் மாத்திரமே இதில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி இராணுவத்தினரால் வலி.வடக்கு மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அந்த மக்களின் 7 ஆயிரம் ஏக்கர் நிலம் இராணுவத்தினரால் உயர் பாதுகாப்புவலயமாகப்பிரகடனப்படுத்தப்பட்டது. போர் முடிந்த பின்னரே வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், மருத்துவமனைகள் என்று பல்வேறு கட்டடங்களையும் இராணுவம் இடித்துத் தரைமட்டமாக்கி அழித்தது.

2013ஆம் ஆண்டு மக்கள் போராட்டம் தொடர்ந்து ஆட்சி மாற்றம் என்பன நிகழ்ந்த நிலையில், மக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டன. சுமார் 3 ஆயிரத்து 500 ஏக்கர் வரையிலும் இவ்வாறு மக்கள் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டன. மக்கள் காணிகள் விடுவிக்கப்பட்டாலும் அவற்றின் இடையே இராணுவ முகாம்கள் இன்னமும் உள்ளன.

பலாலியில் 5 கிராம அலுவலர் பிரிவுகளிலும், மயிலிட்டியில் 3 கிராம அலுவலர் பிரிவுகளிலும், வயாவிளானில் இன்னும் சில பகுதிகளுமாக பல்வேறு பகுதிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. 30 ஆண்டுகள் கடந்தும் மீள்குடியமர முடியாமல் தவிக்கும் மக்களுக்கு இந்த ஆண்டிலாவது ஓர் விடிவு கிடைக்க வேண்டும் என்று, வலி.வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார். (ஒ,5)

## குடத்தனை...

ஸாருக்கு அறிவித்ததையடுத்து சடலம் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-26)

## இந்திய...

டிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார் ஜாசிங்க. (ஒ,5)

## ரயிலுடன்...

திக்கு அருகில் உள்ள ரயில் தடத்தில் இந்த விபத்து நடந்துள்ளது. விபத்துக்குள்ளானவர் கிளிநொச்சி, அறிவியல் நகரைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ)

## இந்தியக்...

செலுத்துவது யார் என்ற சர்ச்சை தோன்றியுள்ளது.

கலாசார மண்டப கட்டடப் பணிகள் முடிவடைந்த பின்னர் அது கொழும்பு அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். கொழும்பு அரசால் அது மாநகர சபையிடம் ஒப்படைக்கப்படும். இலங்கை அரசு, இந்திய அரசு, யாழ்ப்பாணம் மாநகர சபை இடையிலான முத்தரப்பு ஒப்பந்தத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும், கொரோனா சூழல் காரணமாக கட்டடக் கையளிப்பு இன்னமும் நடைபெறவில்லை.

2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்த மாதம் வரையில் 36 லட்சத்து 31ஆயிரத்து 970 ரூபா மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்று மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டடம் எந்தவொரு தரப்பிடமும் ஒப்படைக்கப்படாத நிலையில், இந்தக் கட்டணத்தை யார் செலுத்துவது என்ற சர்ச்சை கிளம்பியுள்ளது. (ஒ,5,105)

# தேர்தலுக்கான வழிமுறைகள் நடைமுறை சாத்தியமற்றவை

## ஆளும், எதிரணி உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13

பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டத்திட்டங்கள் நடைமுறை சாத்தியமற்றவை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு,

பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் தேர்தல் சம்பந்தமாக விதிமுறைகளும் முன்வைக்கப்பட் டுள்ளன. இவை நடைமுறைக்கு சாத்தியமற்றவையாகவே இருக்கின்றன.

குறிப்பாக பரப்புரையை முன்னெடுப்பதற்கான சுதந்திரம் இருக்க வேண்டும். கூட்டத்துக்கு 100 பேர் அல்லது 500 பேர் வருவதாக இருந்தால் அவர்களின் பெயர்ப் பட்டியலை வழங்க வேண்டுமாம். இதனைச் செய்யமுடியுமா?

எனவே தேர்தல் தொடர்பில் தெளிவில்லாத, அனுபவம் அற்றவர்களே இவ்வாறான விடயங்களைச் செய்துள்ளனர். சமூக இடைவெளியைப் பின்பற்றி வாக்களிப்பு நடைபெறுமானால் வரிசையானது ஒரு கிலோ மீற்றரையும் தாண்டிச்செல்லும்.

எனவே, அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடிய பின்னரே இவற்றை உருவாக்கியிருக்க வேண்டும். அவ்வாறு கலந்துரையாடல் இடம்பெற்றிருக்குமானால் சிறப்பான யோசனைகளை முன்வைக்கக் கூடியதாக இருந்திருக்கும் என்றார்.

அதேவேளை இது தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

'தேர்தல் கூட்டங்களுக்கு வருபவர்களின் பெயர்ப் பட்டியலை சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன. இவை நடைமுறைச் சாத்தியமற்றவை. அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடாமல் இவ்வாறான முடிவுகளை எடுக்க முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.(ஒ.5,44)

**பணியாளர் தேவை**

யாழ். நகர் மத்தியில் உள்ள சன்றைஸ் மெடி கிளினிக் இற்கு சந்தைப் படுத்தல் துறைக்கு ( Marketing Field ) பணியாளர் தேவை. (ஆண் / பெண்)

நேர்முகத் தேர்வு : 14.06.2020 (ஞாயிற்றுக்கிழமை)
15.06.2020 (திங்கட்கிழமை)

நேரம் :- முற்பகல் 10.00 மணி இடம் :- சன்றைஸ் மெடிக்கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ். பஸ்நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

021 222 6069, 021 222 8460

**பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்**

பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளதால் மாணவர்களுக்கான முகக்கவசம் ( Mask ) மிகக்குறைந்த சலுகை விலையில்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ். பஸ்நிலையம் அருகில்

**மருந்தக உதவியாளர் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றுக்கு அனுபவம் மிக்க பெண் மருந்தக உதவியாளர் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
**076 588 7252**

**மரண அறிவித்தல்**

அன்னை மடியில் 28 . 09 . 1934



ஆண்டவன் அழைப்பில் 11 . 06 . 2020

**திருமதி புவனேஸ்வரி அருணகிரிநாதன்**

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி அருணகிரிநாதன் கடந்த **(11.06.2020)** வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம் - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முகாந்திரம் **S.R.**தளையசிங்கம் **(J.P)**, செல்வமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் திரு.அருணகிரிநாதன் (முன்னாள் சிரேஷ்ட உதவி தொழில் ஆணையாளர், விசேட மாநகரசபை ஆணையாளர், மேலதிக அரசாங்க அதிபர் - மட்டக்களப்பு) அவர்களின் ஆருயிர் மனைவியும் சந்திரிகா (கனடா), யோகினி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற விஜிதரன் (யாழ். பல்கலைக்கழக மாணவன்), சர்மிளா (லண்டன்), சிறிதரன் (லண்டன்), பத்மசிறி (செலான் வங்கி - மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருபேந்திரன், சிறிபாலமுரளி, **Dr**.கீர்த்தி, **Dr**.இளங்கோ, கிருபாகரி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சந்திராதேவி, யுவராஜ், ஜெயராஜ் மற்றும் தியாகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சிறிய தாயும் ரஜனி, சிவனேசன் ஆகியோரின் அன்பு மாமியும் ஜக்சனா, பாவிக்ஷன், சோபிக்ஷனா, டீபீக்ஷனா, துஷாரா, கயுரிக்கா, விபுசித்தா, அனிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, அம்பலவாணர், பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற யோகநாதன், ஆனந்தலெட்சுமி, சண்முகநாதன், இராமநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(14.06.2020)** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **10.00** மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கள்ளியங்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.12, ஈஸ்வரன் ஒழுங்கை,
மட்டக்களப்பு.

தகவல்:
குடும்பத்தினர்

**065 222 2427**

# கொரோனா 1,879

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 2 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 879 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தொற்றுக்குள்ளான மேலும் 46 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 196 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனா வைரஸால் இதுவரை பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 672 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 57 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-22)



# மங்களவின் மனதை மாற்றிய சமந்தா பவர்

## வாசுதேவ கிண்டல்

கொழும்பு, ஜூன் 13

அமெரிக்க இராஜதந்திரியொருவர் வழங்கிய ஆலோசனைக்கமையவே பொதுத்தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து மங்கள சமரவீர விலகியிருக்கக்கூடும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், ஆளுங்கட்சி உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யார் என்ன சொன்னாலும் ரணிலுடன் இணைந்த அரசியல் பயணத்துக்கே மங்கள சமரவீர தயாராகிறார். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கவை கைவிட்டு பயணிக்கக்கூடாது என சமந்தா பவர் (அமெரிக்க இராஜதந்திரி) போன்றவர்கள் மங்களவுக்கு அறிவுரை வழங்கியிருப்பார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்புகளும், மங்கள சமரவீரவின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளும் ஒருமித்ததாகவே காணப்படும். இருவரும் ஒரே கொள்கையுடையவர்கள்.

எனவே, சஜித் அணியை நசுக்கி, ரணில் தரப்புக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக்கொடுப்பதற்கே மேல்மட்ட சக்தியொன்று முயற்சித்து வருகின்றது.

அதேபோல் வாக்குகளுக்காக இன்று நல்லவர்போல் காட்சியளிக்கும் சஜித் பிரேமதாச நல்லாட்சி எனக் கூறப்படும் அரசில் அமைச்சராக இருந்தார். எல்லா திட்டங்களுக்கும் ஆதரவு வழங்கினார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி கொள்கையின் கீழ் போட்டியிட்டால் வெற்றிபெற முடியாது என்பது சஜித்துக்கு தெரியும். இதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்பற்றவராக தன்னைக் காண்பித்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றார்.

ஆனபோதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையாலேயே அக்கட்சி தேர்தலில் படுதோல்வியடையும். சஜித் தரப்பை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை, எனவும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார். (ஒ.5,44)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.